நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 17 வியாழக்கிழமை (30.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 155

பிரிட்டிஷ், பிரெஞ்சு அமைச்சர்களின் யுத்த நிறுத்தப் பேச்சு தோல்வியில்

வலியுறுத்தல் தொடரும் எனக் கவலையுடன் தெரிவிப்பு

மில்லிபாண்ட்

பேர்னார்ட் கௌச்னர்

கொழும்பு, ஏப்ரல் 30

இலங்கையில் யுத்தநிறுத்தமொன்றை ஏற்படுத்துவது குறித்து பேச்சு நடத்துவற்கென நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ், பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர்கள் தமது முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன என்று தெரிவித்துள்ளனர்.

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களின் நிலை குறித்த சர்வதேச சமூகத்தின் கவலை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து யுத்தநிறுத்தமொன்றை மேற்கொள்ளுமாறு அரசை வலியுறுத்துவதற்கென பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்டும் பிரான்ஸ் வெளிவிவகர்ர அமைச்சர் பேர்னார்ட் கௌச்னரும் நேற்று இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டனர்.

இவர்கள் நேற்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவைச் சந்தித்தனர். யுத்தநிறுத்தம் மற்றும் பொது மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதன் அவசியம் குறித்து தமது வலியுறுத்தல்களை முன்வைத்தபோதும் இலங்கையை இணங்க வைக்க முடியவில்லையென இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

''நாங்கள் தீவிரமாக முயன்றோம் - நாங்கள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே ☞

8 ஆம் 9 ஆம் பக்கங்களில்

கல்விச்சுடர்

தரம் - 05 புலமைப்பரிசில் மாணவருக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்

7,000க்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டதை சர்வதேசம் கைகட்டிப் பார்த்து நிற்பது ஏன்?

பிரிட்டிஷ் அமைச்சரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்வி

கொழும்பு, பெப். 30

வன்னிப் பகுதியில் கடந்த மூன்று மாதங்களில் 7 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர் 14 ஆயிரம் பேர் காயமடைந்தனர். ஆனால் சர்வதேச நாடுகள் அதனைத் தடுத்து நிறுத்தவதற்கு எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்காது பார்த்துக் கொண்டிருக்கின்றன என்று கொழும்புக்கு வருகை தந்த பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்டிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

(16 ஆம் பக்கம் பார்க்க)

வன்னியில் சிக்கியுள்ள மக்களுக்கு உதவ தொண்டு நிறுவனங்கள் செல்ல வேண்டியதில்லை

பிரிட்டிஷ், பிரெஞ்சு அமைச்சர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.30

வன்னியில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் சிக்கியிருக்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு உதவ சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் ஏதும் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னை சந்தித்த பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர்களிடம் கூறியுள்ளார்.

ஏம்பிலிப்பிட்டிய நகரில் , ஜனாதிபதிக்கும் , இந்த இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களான, டேவிட் மில்லிபாண்ட் மற்றும் பெர்னார்ட் குஷ்னர் ஆகியோருக்கும் இடையே

(16 ஆம் பக்கம் பார்க்க)

வலைஞர் மடப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் மீது தற்கொலைத் தாக்குதல்

இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஏப். 30

முல்லைத்தீவு, வலைஞர்மடம் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் மீது நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் நேற்று மதியம் வரை அதாவது 24 மணி நேரத்தில் 7 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தினர் என இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

படைத்தரப்பினர் மீது அவர்களது ஆயுத தளபாடங்களை இலக்கு வைத்துநேற்றுக்காலை விடுதலைப் புலிகள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

சுவீடிஷ் அமைச்சருக்கு விஸா வழங்க இலங்கை மறுப்புத் தெரிவிக்கவில்லை

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார்

கொழும்பு,ஏப்.30

சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஹார்ல் பல்ட்டின் இலங்கை விஜயத்துக்கு அரசு மறுப்புத் தெரிவித்திருப்பதாக பரப்பப்பட்ட செய்தியில் உண்மையில்லை. அரசின் வசதி கருதி அவரது வருகைக்காக வேறு ஒரு தினம் மாற்றப்பட்டது எனத் தேசிய பாதுகாப்புக்கான பேச்சாள ரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

ஷெல் வீச்சை தொடர்கிறது இராணுவம் ஐ.நா. சபை குற்றம் சாட்டுகின்றது

லண்டன்,ஏப். 30

வன்னியில் இடம்பெறும் மோதல்களின் போது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதில்லை என்று அரசு அறிவித்த போதிலும் இலங்கை இராணுவம் ஷெல் வீச்சுக்களை மேற்கொள்கின்றது என ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டியுள்ளது

(16 ஆம் பக்கம் பார்க்க)

இப்போது டயலொக் CDMA யாழ்ப்பாணத்திலும்

டயலொக் CDMA முற்கொடுப்பனவு இணைப்பு

ரூ 5999/- மட்டுமே

- இலவச IDD இணைப்பு
- செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்
- ஆரம்பக் கட்டணம் எதுவுமில்லை
- Kit Ez reload ஊடான ரீலோட் வசதி

Dialog CDMA
homefone
இல்லத்தின் அதிர்ஷ்டம்!

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வன்னியிலிருந்து உரியமுறைப்படி வராதவர்களை இராணுவ முகாம்களில் சரண் அடைய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.30

வன்னியிலிருந்து குடாநாட்டுக்குள் உரிய முறையில் நலன்புரி நிலையங்களில் தங்காது இரகசியமாக வந்து தங்கியுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் அருகில் உள்ள இராணுவ முகாம்களில் சரண் அடையவேண்டும். அவர்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும். எந்தவித அச்சமுமின்றி சரண் அடையுங்கள்.

மேற்கண்ட அறிவிப்பை பருத்தித்துறை இராணுவத்தினரின் சிவில் நிர்வாகப் பிரிவினர் ஒலிபெருக்கி மூலம் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

கரவெட்டி, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் இந்த அறிவித்தல் ஒலிபெருக்கி மூலம் நேற்று முன்தினம் ஒலி பரப்பப்பட்டது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களில் எவரும் தப்பிச் செல்லவில்லை. அங்கிருந்தவர்களில் சிலர் தப்பிவிட்டதாகவும் அவர்களை சரண் அடையுமாறும் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு ஏதும் விடுக்கப்படவில்லை என்றும் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

நெல்லியடி நலன்புரி நிலையத்தில் இருந்து சிலர் தப்பிச் சென்றதாகவும் அவர்களைச் சரண் அடையுமாறு ஒலிபெருக்கி மூலம் கேட்கப்பட்டதாகவும் வெளியான தகவல் தவறானது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

மரண அறிவித்தல்கள்

சின்னத்துரை கனகேந்திரம் (தாடித்துரை)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனகபுரம், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் சிதம்பரபுரம், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கனகேந்திரம் (தாடித்துரை) நேற்று (29.04.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - விசாலாட்சி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், காராளசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விசயலச்சுமியின் அன்புக் கணவரும் வசந்தகுமாரி (கௌரி), காலஞ்சென்ற குமரன் மற்றும் மணிமேகலை (சிட்டா), இளங்கோவன், இளவழகன், சூரியகுமாரன், காலஞ்சென்ற கலைவாணி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
விஜயகாந்தன் மகாதேவி (சோதி).

அப்புக்குட்டி பவளம்

கலைமகள் வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி பவளம் (28.04.2009) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அப்புக்குட்டியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரன் - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் இரத்தினம் (இத்தாலி), அம்பிகாபதி (லண்டன்), தேவராஜா, நேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சற்குணதாஸ், ஜெயதாஸ் மற்றும் குகதாஸ் (இத்தாலி), மோகனா (சுவிஸ்), மோகனதாஸ் (லண்டன்), தர்ஷனா ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜ்குமார் (சுவிஸ்), இன்பலோஜினி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜோதிகா (இத்தாலி), ஆகாஷ் (இத் தாலி), மீனுஜா (சுவிஸ்), மிதுலன் (சுவிஸ்), மிதுனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் [illegible]க்கிரியைகள் இன்று (30.04.2009) வியாழக்கிழமை [illegible] 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

தகவல்: க.அப்புக்குட்டி (கணவர்).

களனிப் பல்கலைக்கழக உளச்சார்புப் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.30

களனிப் பல்கலைக்கழகத்தின் சூழலியல்காப்பும் முகாமைத்துவமும் கற்கைநெறி அனுமதிக்கான உளச்சார்புப் பரீட்சை எதிர்வரும் 3 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இராமநாதன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், களனிப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சரத் அமுனுகமவுடன் தொடர்பு கொண்டு விடுத்த கோரிக்கையின் பேரில் இந்தப் பரீட்சை இங்கு இடம்பெறவுள்ளது. (1)

திறந்த பல்கலையில் இறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்.30

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தின் 2007/2008 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் 2, 3, 16, 17 ஆம் திகதிகளில் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (1)

யாழ்ப்பாணத்தில் நாளை மேதினக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.30

மேதினத்தை ஒட்டி தொழிலாளர் ஒத்துழைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வேம்படி வீதியில் உள்ள அகவிழி அலுவலகத்தில் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த சா.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் உரையாற்றுவர். (1)

திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு "TAMING OF THE SHREW" என்னும் ஆங்கிலப்படம் திரையிடப்படவுள்ளது.

ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-120)

ஓட்டோ தடம்புரண்டதில் பயணித்தவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.30

வீதியோர முட்கம்பியில் சிக்கி ஓட்டோ தடம் புரண்டதில் அதில் பயணித்தவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேர்ந்த க.வைபோகராசா (வயது 52) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (1-207)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
பதிவுகளை 01.05.2009 முன்னர் செய்யுங்கள்
Microsoft Office * English * Accounting
*DTP(Pagemaker,Photoshop,CorelDrow,Typing)
Hardware * Web Developing* Video Editing
*AutoCAD(with Manual Drawing) * VB.net
International Courses...
MCP_Microsoft Certified Professional
MCSE_Microsoft...Systems Engineer
Degree Course * BIT Semester 2,4 & 6,Project
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
MCS
Supported By
UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

மரண அறிவித்தல்கள்

கந்தசாமி பொன்னம்மா

ஒட்டுவெளி, மிருசுவிலை நிரந்தர முகவரியாகவும் வல்லிபுரக்கோயில் வீதி, மந்திகை, புலோலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பொன்னம்மா நேற்று (29.04.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு கந்தசாமியின் அன்பு மனைவியும் குலேந்திரராசா, குலேந்திரமலர் (இத்தாலி), காலஞ்சென்ற குலேந்திரராணி மற்றும் குலேந்திரவதனி, காலஞ்சென்ற குலேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாநிதி, கனகேஸ்வரன் (இத்தாலி), வசந்தரூபன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.04.2009) வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லிபுரக் கோயில் வீதி, மந்திகை, புலோலி.

தகவல்: முருகேசு கந்தசாமி (கணவர்)

நல்லையா செல்லம்மா

அளவெட்டி வடக்கு, புதுவளவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, காளிகோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட நல்லையா செல்லம்மா புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் அன்னப்பிள்ளையின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் கந்தையா, சரவணமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, செல்வராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்தபதி சிவலிங்கத்தின் அன்பு மாமியாரும் தங்கமணியின் சிறியதாயும் சிவசங்கர், சிவறஞ்சினி, சிவராஜ், சிவப்பிரபா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
திருநெல்வேலி.

(84886)

தகவல்:
ஸ்தபதி ஆ.சிவலிங்கம்
(மருமகன்)

கந்தையா நாகம்மா

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகம்மா 27.04.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சத்தியசீலன் (முன்னாள் மானிப்பாய் ப.நோ.கூ.ச. எரிபொருள் நிலைய முகாமையாளர்) மற்றும் ராணிக் கமலா (France), விஜயகுமாரி (நவாலி), வசந்தகுமாரி (Germany), தேவிமனோகரி (Germany), சாந்தகுமாரி (நவாலி), ஜெயக்குமாரி (Germany), ஞானசீலன் (France), ரவிசங்கர் (Swiss), கோமதி (France) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராணி (Teacher of International School), ஞானசேகரம், தெய்வேந்திரம் (Germany), வடிவேலு, துரைசிங்கம், ஜெயக்கொடி (நவாலி), ஞானசேகர், எஸ்தர் யசோதா, யோகராணி ஆகியோரின் மாமியாரும் ந.செல்லம்மா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடராசா, லீலா ஆகியோரின் மைத்துனியும் கரேஸ்குமார், பேபிஜகிலா, சுரேஸ்குமார், செல்வகுமார், அனுரா, டனுசா (France), பிரதீபன் (Swiss), பிரபாஸ்கரன் (France), பிரபாகரன் (Germany), ஜெயமிலா (Germany), றேனுகா, சுனிற்றா (நவாலி), கோபிகிருஷ்ணன் (Germany), ஜெர்னி, டல்றின், கிறியன்சி, செரோன், டிவோன்கா (உடுவில்), பெனோடிரோஷன் (Germany), கஜன், கபிலினி (Germany), பிரவீன், பிரியந்தி, பிரியங்கா (France), சகானா (Swiss) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் றோகிம், நிஷா (Denmark), சாரா (France), லாவண்யா (நவாலி), றொசான், றொக்சன் (Swiss), பிரவீனா, பிரவீன் (Germany), விதுஷன் (France), கௌசிகா, கௌசிகன் (Germany), சர்மியா (நவாலி) ஆகியோரின் பூட்டியும் மதியழ கன், றூபி (Swiss), கிரிதரன், கௌரி, வாசுகி (Canada), துஷ்யந் தன், சதீஸ், ஜானகி (Canada), ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2009) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை
April 27 முதல்
மணமக்கள் சங்கமமாகும்
"கெட்டி மேளம்" திருமண சேவை
Keddy Melam Wedding Service
(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)
உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)
எமது நிறுவனத்தில் அடையாள அட்டை, பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.
E.Mail: moorthydigital@gmail.com

கோழிக்குஞ்சு விநியோகம்
No I BAIRAHA புறொயிலர் குஞ்சுகள் இன்று பெற்றுக்கொள்ளலாம். பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
திருமகள் கமத்தொழில் நிலையம்
T.P 0212223270, 0774281084 784, [illegible] வீதி, [illegible], யாழ்ப்பாணம்.

நீங்களும் Engineer
Microsoft New Batch :01.05.2009 07.30 AM
★ செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்.
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு வீசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
★ USA,UK, பெங்களூர் பல்கலைக்கழகங்களில் BSc,MSc
★ Student Visa, Work Permit _Carrier guidance
கொழும்புபல்கலைக்கழகத்தின் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விபரங்களுக்கு நேரில் MCS
324, பலாலி வீதி, Supported By
யாழ்ப்பாணம் UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

மேற்குலகின் ஐக்கியத்தை விரும்பாத இலங்கை

முல்லைத்தீவுக் களமுனையில் போர் விமானங்கள், கனரக ஆயுதங்கள் போன்றவற்றைத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்துவதில்லை என்று இலங்கை அரசு அறிவித்துள்ள போதிலும் களத்தில் யுத்தம் தீவிரமாகத் தொடர்வதாகவும், பேரழிவு நாசம் எண்ணிப் பார்க்க முடியாத கொடூரமாக நீடிப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்த முனைப் பேரழிவுகள் தொடர்பாக சர்வதேசம் வெளிப்படுத்தும் சிரத்தை - கவலை - கரிசனை - போன்றவற்றை உதாசீனப்படுத்தியும், புறந்தள்ளியும் நடந்தபடி தன்னுடைய போர் முனைப்புப் போக்கைக் கொழும்பு தீவிரப்படுத்தியிருப்பது பெரும் சர்ச்சையாக உருவெடுத்திருக்கின்றது. இதனால், இலங்கை தன்னுடைய யுத்த வெறிப் போக்குக்கு முண்டுகொடுத்து, உதவி, ஒத்தாசை புரியும் சில 'தோழமை' நாடுகள் தவிர்த்து ஏனையவற்றுடன் இராஜதந்திர முறுகலுக்கு ஆளாகும் நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது.

குறிப்பாக மேற்குலகுடன், முரண்டு பிடித்து இழுபறிப்படும் நிலைமைக்கு இலங்கையின் இராஜதந்திரம் சென்றிருக்கின்றது.

இலங்கைப் போரினால் தமிழினத்துக்கு - அப்பாவித் தமிழ் மக்களுக்கு நேர்ந்திருக்கும் பேரழிவுக் கொடூரங்கள் குறித்து சர்வதேச சமூகத்தின் மிக உயர்ந்த - ஐக்கிய - கட்டமைப்பான ஐ.நா.மன்றம் தெரிவித்த கருத்துக்களையும் கரிசனையையும் கூட செவி மடுக்கவோ, கருத்தில் எடுக்கவோ கொழும்பு மறுத்துவிட்டது.

யுத்தமுனைப் பகுதியில் சிக்கியுள்ள மக்களுக்கு நேரடியாகச் சென்று, அவர்களுக்கு அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படும் மனிதாபிமான உதவிகளை ஐ.நாவின் மனித நேயத் தொண்டு முகவர் அமைப்புகள் செய்வதற்கான அனுமதியைக்கூட இலங்கை அரசிடம் பெற முடியாத கையறு நிலையில் தமது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு, வெறுங்கையோடு புறப்பட்டிருக்கின்றார் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா.ஆணையாளர் ஜோன் ஹோம்ஸ்.

இனப்பிரச்சினையை ஒட்டிய யுத்த விவகாரத்தில் தனது வழிகாட்டு ஆலோசனைகளை ஒரேயடியாகப் புறக்கணித்து, மிதப்புடன் நடந்துகொள்ளும் கொழும்பின் போக்கு மேற்குலக இராஜதந்திரத்தை கடும் எரிச்சலுக்குள்ளும், விசனத்துக்குள்ளும், சீற்றத்துக்குள்ளும் ஆழ்த்தியிருப்பதில் ஆச்சரியமில்லை.

இலங்கை விவகாரத்தை ஒட்டி அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் தமது பல்வேறு துறைசார் நிபுணர்களையும், நிர்வாகிகளையும் ஒருசேர அழைத்து ஆலோசிக்கும் அளவுக்கு நிலைமை சென்றிருக்கின்றது.

பிரிட்டன், பிரான்ஸ், ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, ஜேர்மன் போன்ற பல தரப்புகள் தெரிவித்திருக்கும் ஆலோசனைகளையும் ஒதுக்கித்தள்ளி யுத்த தீவிரத்தை மட்டும் முழு மூச்சாக முன்னெடுப்பதில் கொழும்பு விடாப்பிடியாக இருக்கின்றது.

இந்தப் பின்னணியில், இலங்கை விவகாரத்தை ஒட்டி, மேற்குலகம் ஐக்கியப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த ஐக்கியப் போக்கால் அதிருப்தி கொண்டிருக்கும் இலங்கை இவ்விடயத்தை மேற்குலகம் ஐக்கியமாகக் கையாள்வதை உடைத்து விடுவதில் தீவிரம் காட்டுகின்றது.

இலங்கையில் எழுந்துள்ள மனிதாபிமானப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஓர் எத்தனமாக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் ஒரே அணியாக இலங்கை வர முயன்றபோது அதற்கு அனுமதிக்காது, சுவீடன் வெளிவிவகார அமைச்சரின் விஜயத்துக்கு மாத்திரம் இலங்கை வேட்டு வைத்தது இந்த ஐக்கியத்தை உடைக்கும் நோக்கத்தில்தான் என்பது தெளிவு.

பிரிட்டனும், பிரான்ஸும் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை வகிக்கும் வல்லரசு நாடுகள். சுமார் இருபத்தியைந்து ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையை விரைவில் ஏற்கப் போகும் தேசம் சுவீடன். இந்த மூன்று தேசங்களினதும் வெளிவிவகார அமைச்சர்கள் ஒரே சமயத்தில், இலங்கை வந்து, ஒன்றாக இங்கு விடயங்களைப் பார்வையிட்டு, கூட்டாக ஒரு முடிவு எடுத்தால் அது மேற்குலகின் ஏகமனதான முடிவாகத் தன் மீது திணிக்கப்பட்டுவிடும் என அஞ்சும் இலங்கை அதனால் அந்தக் கூட்டு முயற்சிக்கு - எத்தனத்துக்கு - வேட்டு வைத்திருக்கின்றது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மில்லி பாண்ட், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் குச்சனர் ஆகியோரின் வருகைக்கு பச்சைக்கொடி காட்டிய இலங்கை, சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கார்ல் பில்ற்ட்டின் வருகைக்கு மட்டும் சிவப்பு சமிஞ்ஞை காட்டிவிட்டது.

மிக விரைவில் ஐரோப்பிய ஒன்றியத் தலைமைப் பதவியை ஏற்கவிருக்கும் ஒரு தேசத்தை இலங்கை இப்படி அவமானகரமாக நடத்தியமை ஐரோப்பிய ஒன்றியத்தைக் கடும் கோபத்துக்கு உள்ளாக்கியிருப்பதாகத் தெரிகின்றது. இந்நடவடிக்கையின் விளைவுகள் மிக மோசமாக இருக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே எச்சரிக்கை வெளியிட்டிருக்கின்றது.

சுவீடனின் வெளிவிவகார அமைச்சரின் வருகையைத் தடுத்து நிறுத்தியமைக்கு 'அதிக எண்ணிக்கையான அரசியல், இராஜதந்திரப் பிரமுகர்களை ஒரே சமயத்தில் வரவேற்பதற்கு இலங்கைக்கு இயலாத காரியம்' - என்று நொண்டிச்சாட்டுக் கூறியிருக்கும் கொழும்பு, அதேசமயம் மறுபுறத்தில் தனக்கு அதிகளவில் உதவிகளை வழங்கி வரும் ஜப்பான் நாட்டின் விசேட தூதுவர் யசூஷி அகாஷியை மட்டும் விரும்பி வரவேற்க ஏற்பாடுகளைச் செய்கிறது. அவர் பெரும்பாலும் நாளை கொழும்பு வந்து சேருவார் என்றும் இலங்கையில் இரண்டு நாள்கள் தங்கியிருப்பார் என்றும் கூறப்படுகின்றது.

கொசோவாப் பிரச்சினையில் அப்பிராந்தியத்தின் சுயநிர்ணய உரிமையை உறுதிசெய்வதில் மிக நியாயமாகவும், உறுதியாகவும், முன்மாதிரியாகவும் செயற்பட்ட பிரமுகரே பிரான்ஸைச் சேர்ந்த குச்சனர் ஆவார். அவர் இப்போது பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சராகக் கொழும்பு வந்திருக்கின்றார்.

கொசோவா நியாயம், ஈழத் தமிழருக்கும் கிட்டுமா? ஈழத் தமிழர்கள் ஏங்கித் தவிப்பது அதற்குத்தான்........!

அகதி முகாம்களில் அப்பாவிப் பொதுமக்கள் உச்சி வெயிலில் நிர்க்கதியான நிலையில்

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் சுட்டிக்காட்டுகிறது

கொழும்பு,ஏப்.30

இலங்கை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள வன்னிப் பொது மக்கள் உச்சி வெயிலில் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் பாரதூரமான மனிதப் பேரவலத்தை எதிர்நோக்கியிருப்பதாகவும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அகதி முகாம்களின் நிலைமை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா.தூதரகப் பேச்சாளர் வில்லியம் ஸ்பின்ட்லர் தெரிவித்துள்ளார்.

தனது சொந்த நாட்டு மக்கள் மீது இலங்கை அரசாங்கம் காட்ட வேண்டிய கரிசனையை தாம் ஞாபகப்படுத்த வேண்டியுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சொந்த மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வருகை தரும் ஆண் பெண்கள் உடல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஐ.நா.தூதரகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உச்சி வெய்யிலில் பெரும் எண்ணிக்கையிலான அப்பாவிப் பொது மக்கள் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களில் அதிகமானோர் திறந்த வெளியில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை பாரிய மனிதப் பேரவலத்திற்கு வழிகோலும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அடைக்கலம் புகுந்துள்ள அதிகளவான பொதுமக்களுக்கு தேவையான தங்குமிட வசதிகளை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

3000 கூடாரங்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு ஏற்கனவே வான் வழியாக அகதி முகாம்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்க நன்கொடையாளர்கள் நன்கொடைகளை உவந்தளிப்பார்கள் என தாம் நம்புவதாக ஸ்பிலின்டர் தெரிவித்துள்ளார். (50)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கனடாவில் அரசியல் தஞ்சம் வழங்கப்பட வேண்டும்

லிபரல் கட்சித் தலைவர் லெங்காடிப் கோரிக்கை

ஒட்டாவா,ஏப்.30

இலங்கையின் வடபகுதியில் இடம்பெற்று வரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ்ப் பொது மக்களுக்கு அரசியல்த் தஞ்சம் வழங்கப்பட வேண்டுமென கனடாவின் லிபரல் கட்சித் தலைவர் மைக்கல் லெங்காடிப் அந்நாட்டு பிரதமர் ஸ்டீவன் ஹார்பரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் கனடாவிற்குள் பிரவேசிக்க இலகுவான நடைமுறைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடாவில் நேரடி உறவுமுறைகளைக் கொண்ட இலங்கையின் வட பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களை விரைவாக கனடாவிற்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் அப்பாவிப் பொது மக்களைப் பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விரைவான முறையில் இலங்கைத் தமிழர்களின் குறிப்பாக மோதல்கள் இடம்பெற்று வரும் பிரதேசங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பொது மக்களின் வீசா விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்துமாறு லெங்காடிப், கனேடியப் பிரதமரை கோரியுள்ளார். (50)

இரட்டை மனிதாபிமான நெருக்கடிக்குள் வன்னிப் பொதுமக்கள் சிக்கியுள்ளனர்

ஐ.நா.பிரதிநிதி ஜோன் ஹோம்ஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.30

இலங்கையில் இரட்டை மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அவசர மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்று வரும் குறுகிய நிலப்பரப்பில் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் சிக்குண்டு இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் பல்வேறு மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வன்னிப் பொதுமக்கள் இந்த இரண்டு மனிதாபிமான நெருக்கடிகளின் காரணமாகவும் துன்பத்தில் உழலுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கக் கட்டுப்பர்ட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களை நேரில் பார்வையிட்டதன் பின்னர் அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

பொதுமக்கள் இழப்புக்கள், உணவு, மருந்துப் பொருள் தட்டுப்பாடு போன்ற விடயங்கள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென ஜோன் ஹோம்ஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மோதல் இடம்பெற்று வரும் வலயங்களில் சிக்கியுள்ள பெருந் தொகையான பொதுமக்கள் பட்டினியை எதிர்நோக்கக்கூடும் என அவர் அச்சம் வெளியிட்டுள்ளார். (50)

கூட்டுறவுச் சங்கங்களில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் கோதுமை மாவுக்கு ஏற்பட்டுள்ள திடீர் தட்டுப்பாட்டினால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சில கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கோதுமை மா மட்டுப்படுத்திய அளவிலேயே வழங்கப்படுகின்றது. ஒரு சில சங்கங்கள் நுகர்வோரின் வசதி கருதி ஐந்து கிலோவுக்கு உட்பட்ட அளவில் கோதுமை மாவை விநியோகித்து வருகின்றன. மற்றும் சில சங்கங்களில் கோதுமை மா இல்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்கனவே கையிருப்பில் இருந்த கோதுமை மாவின் விநியோகத்தை நிறுத்தி அது தொடர்பான விவரங்களை யாழ்.செயலகத்திற்குச் சமர்ப்பிக்குமாறு கடந்த வாரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பொதுமக்களின் உணவுத் தேவைக்காகவே சங்கங்களின் கையிருப்பில் இருந்த கோதுமை மா பெறப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. இதன் காரணமாகவே சங்கங்களில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் அடுத்த சில தினங்களில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (50-224)

நாளை

சித்திரை 18	01.05.2009 வெள்ளிக்கிழமை
திதி:	ஸப்தமி மு.இ.06.42 வரை
நட்சத்திரம்:	பூசம் பி.இ. 03.41 வரை
சுபநேரம்:	05.57 - 07.27
இராகுகாலம்:	10.27 - 11.57

மண்டைதீவுப் பகுதியில் போதியளவு குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஏப்.30

மண்டைதீவுப் பகுதி மக்களுக்குப் போதியளவு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பிரதேசத்தில் பத்து இடங்கள் இனங்காணப்பட்டு அங்கு வாரத்தில் இரு தடவைகள் ஒழுங்காகவும் சீராகவும் எவ்வித இடையூறுகளுமின்றி குடிதண்ணீர் வழங்கப்படுவதாக வேலணைப் பிரதேச சபையின் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவுப் பகுதி மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக கடந்த மாதம் 27ஆம் திகதி மண்டைதீவு உப அலுவலகத்தில் பொதுமக்கள், கிராம அலுவலர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி அங்கு குடிதண்ணீர் விநியோகம் நடைபெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி உதயனின் 7ஆம் பக்கதில் 'மண்டைதீவுப் பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(50)

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் III இற்கு 2ஆம் கட்டமாக 46 பேர் நியமனம்

அச்சுவேலி,ஏப்.30

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் III க்கு இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்ட நியமனங்களில் தமிழ்மொழி மூலமான பிரிவுக்கு 46 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு கடந்தவாரம் கொழும்பில் நடை பெற்ற போதிலும் யாழ்.மாவட்டத்தில் இருந்து எவரும் கலந்துகொள்ளவில்லை என அறியப்படுகின்றது. அவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் காலம் தாழ்த்தியே கிடைக்கப்பெற்றன.

யாழ்.மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ்.மாவட்ட செயலகத்துக் கூடாக உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

தமிழ் மொழியியலாளர்களுக்கு வழங்கப்பட்ட நியமன விவரம் வருமாறு;

தொழிற்கல்வி 4பேர், ஆங்கிலம் 2ஆம் மொழி 11பேர், நடனம் 2பேர், நாடகமும் அரங்கியலும் 2 பேர், விளையாட்டும் உடற்கல்வியும் 2 பேர், ஆரம்பக்கல்வி 10பேர், ஆரம்பக்கல்வி கணிதம் 3பேர், தகவல் தொழில் நுட்பம் 10 பேர் சித்திரமும் கைப்பணியும் 2 பேர், மனை விஞ்ஞானம் ஒருவர்.

நியமனம் பெறுவோரின் விவரங்களும், அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள கல்வியியற் கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளினதும் விவரங்கள் வருமாறு:

ஆரம்பக்கல்வி - கணிதம்

கே.கிருஷ்ணயோகன் (யாழ்ப்பாணம்), பி.கமலசிங்கம் (வவுனியா), வி.முரளி (மட்டக்களப்பு),

தகவல் தொழில்நுட்பம்

கே.சாளினி (யாழ்ப்பாணம்), நவநீத கிருஷ்ணன் (ஸ்ரீபாத), வி.நந்தகுமார் (நவன்புர), எம்.நிரேஷ்குமார் (ஸ்ரீபாத), ஏ.உதயகுமார் (யாழ்ப்பாணம்), எஸ்.குகானந்தன் (வவுனியா), எச்.அன்வர் சதன் (அட்டாளைச்சேனை), எச்.மின்வர் (அட்டாளைச் சேனை), பி.ரிஸ்கான் (தர்காநகர்), சு.ஹீரையாபாத்திமா (தர்காநகர்)

சித்திரமும் கைப்பணியும்

ஏ.மொஹமட்நியாஸ் (மட்டக்களப்பு).

உடற்கல்வி

டி.மோகனகுமார் (மட்டக்களப்பு), எம். சுபியா பார்சானா (தர்காநகர்)

தொழிற்கல்வி பாடநெறி

கே.பாஸ்கரன் (யாழ்ப்பாணம்), பி.மரியதாசன் (யாழ்ப்பாணம்), சி.நாகேந்திரன் (யாழ்ப்பாணம்), பி.தனபாலன் (யாழ்ப்பாணம்),

ஆங்கிலம்

சி.மொரின் (மட்டக்களப்பு), ரி.தனேந்திரன் (தர்காநகர்), எஸ்.பற்றிக் ஜெராட் (வவுனியா), எம்.ஜோர்ச் (அட்டாளைச்சேனை), சி.குலரவன் (வவுனியா), அகமெட்நவீர் (அட்டாளைச்சேனை), ரி.மோகன் (யாழ்ப்பாணம்), எம்.பிரபாகரன் (யாழ்ப்பாணம்), ஏ.மொஹமட் (சிறிபாத), அப்துல்ஜெசீம் (மட்டக்களப்பு), எஸ்.முகுந்தன் (யாழ்ப்பாணம்),

நடனம்

பி.வேல்நிதி (யாழ்ப்பாணம்), எஸ்.தயாபரன் (யாழ்ப்பாணம்.

ஆரம்பக்கல்வி

ஜே.உதயகுமார் (யாழ்ப்பாணம்), எஸ்.லலீசன் (மட்டக்களப்பு), ஆர்.சத்தியா (பலாலி), ஆர்.சவீ (தர்காநகர்), ஜீ.பசில் கானியா (அட்டாளைச்சேனை), என்.ஞானவேல் (யாழ்ப்பாணம்), ரி.இளங்குமரன் (வவுனியா), பாத்திமா ரிட்வியா (அட்டாளைச்சேனை, வி.கருணைலிங்கம் (கோப்பாய்), எச்.சுவிதா (வவுனியா)

மனை விஞ்ஞானம்

வி.ரவீந்திரன் (வவுனியா)

நாடகமும் அரங்கியலும்

எஸ்.இளங்கோ (மட்டக்களப்பு), கே.திலகநாதன் (யாழ்ப்பாணம்),

(9-11)

காக்கைதீவு மாதிரிக் கிராமத்தில் ப.நோ.கூ.ச. விற்பனை நிலையம்

நவாலி, ஏப்.30

ஆனைக்கோட்டை காக்கைதீவு மாதிரிக் கிராமத்தில் மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் விற்பனை நிலையமொன்று இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு சங்கத் தலைவர் இ.வன்னியசேகரம் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு மானிப்பாய் ஆஸ்பத்திரி வீதியில் கிளை 2இற்கு அருகில் சிறிய கூட்டுறவு நகர்க்கடையொன்றும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்துகொள்வார்.(203-100)

விற்பனைக்கு

சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்திற்கு அருகிலுள்ள ஓடு போட்டுள்ள கட்டடம் முழுமையாக விற்பனைக்குண்டு. இதனை வாங்க விரும்புவோர் நேரில் வந்து கட்டடத்தைப் பார்வை செய்து நீங்கள் வாங்கவிரும்பும் மொத்தப் பெறுமதியைக் குறிப்பிட்டு, கடிதம் மூலம் 2009.05.20 க்கு முன் சில்லாலை கதிரைமாதா ஆலய பங்குத் தந்தையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கதிரைமாதா ஆலய
அருட்பணிச் சபை.

விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் தனிப் பாவனையில் உள்ள இங்கிலாந்து தயாரிப்பு ஊசிலி (WOLSELLY) நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0771188105

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1083 நீலம்

வெற்றி இலக்கங்கள்

துலாம் 19 35 36 60

28-04-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 3,770,950/- வெல்லப்படவில்லை

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் எண்ணிக்கை	பரிசுத் தொகை	மொத்தம்
1 இலக்கம்	210,273	20/-	4,205,460/-
2 இலக்கங்கள்	19,320	40/-	772,800/-
1 இல. + லக்கினம்	19,068	60/-	1,144,080/-
2 இல. + லக்கினம்	1,770	200/-	354,000/-
3 இலக்கங்கள்	512	1000/-	512,000/-
3 இல. + லக்கினம்	54	10,000/-	540,000/-
4 இலக்கங்கள்	3	200,000/-	600,000/-
4 இல. + லக்கினம்	-	3,770,950/-	-
மொத்தம்			8,128,340/-
வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு	5	100,000/-	500,000/-
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை	251,005		8,628,340/-

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,710,050/-

2009 மே 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

மொனராகலை	400075738-1-07
கம்பஹா	400073089-8-16
கண்டி	400072799-9-10
கண்டி	400080964-5-04
மாத்தளை	400074837-2-27

பாராட்டி வாழ்த்துகின்றோம்

Mr.K.Sriram
Asst.field Manager
Super Golden Medal

Mr.M.Muhuntharaj
Group Leader
Super Golden Medal

Mr.T.Mohanaraj
Group Leader
Silver Medal

இன்று 30.04.2009 பி.ப. 4.00 மணிக்கு ஹில்ரன் ஹோட்டலில் இடம்பெறும் வருடாந்த விருது வழங்கும் விழாவில் பதக்கங்களைப் பெறும் எமது பணியாளர்களை மன்தார வாழ்த்திக் கௌரவிக்கின்றோம்.

Mr.K.Mayooran
Group Leader
Silver Medal

Mr.K.Sutharsan
Group Leader
Bronze Medal

Miss.J.Princy
Group Leader
Bronze Medal

HNB ASSURANCE
For a brighter future

HNB Assurance PLC, Regional Office,Jaffna.

முகா-மையாளர்களும் பணியாளர்களும்

இலங்கைத் தமிழ் மக்கள் மீது இந்தியா கொண்டுள்ள இதய சுத்தியை நிரூபிப்பதற்குச் சரியான தருணம் இதுவே

இலங்கைத் தமிழ் மக்கள் மீது இந்திய மத்திய அரசு கொண்டுள்ள அக்கறையை வெளிப்படையாக நிரூபிப்பதற்கான சரியான தருணம் இதுதான். இதிலிருந்து இந்திய அரசின் உண்மைத் தன்மை புலப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

அண்மையில் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்துப் பேச்சு நடத்தியமை தொடர்பாக உதயனுக்கு நேற்றுமுன்தினம் [28.04.2009] வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு:

கேள்வி: இந்திய விஜயத்தின்போது அதிகாரிகளிடம் என்ன விடயம் குறித்துப் பேசினீர்கள்?

பதில்: வன்னியில் இலங்கை அரசு தற்போது மேற்கொண்டு வரும் தாக்குதல் களினால் பெரும் எண்ணிக்கையில் பொது மக்களின் உயிர்கள் பறிக்கப்படுகின்றன. முக்கியமாக எமக்குக் கிடைத்த தகவல்களின்படி முல்லைத்தீவுப் பிரதேசத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்கள் என்று சொல்லப்படுகின்ற பகுதிகள் மீது இலங்கை அரச படைகள் மேற்கொண்டு வரும் விமானத் தாக்குதல்கள், இரசாயனக் குண்டுத் தாக்குதல்கள், கொத்துக் குண்டுத்தாக்குதல்கள், பொஸ்பரஸ் குண்டுவீச்சுகள் ஆகியவற்றால் நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் கொல்லப்படுவதுடன் ஆயிரக் கணக்கானோர் படுகாயமடைந்து வருகின்றனர். எனவே தமிழ் மக்களை அழிக்கும் இந்தச் செயலைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென வற்புறுத்திக் கேட்டிருந்தோம்.

தமிழ்மக்களை மட்டுமல்ல தமிழர்களின் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன் இலங்கை அரசு இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியி ருந்தோம்.

கேள்வி: நீங்கள் திடீரென இவ்வாறு இந்தியத் தலைவர்களைச் சந்திப்பதற்கான காரணம் என்ன?

பதில்: எமது மக்கள் மீது இரசாயனக் குண்டு வீசப்படுகின்றது என்னும் செய்திதான் நாம் உடன் சந்திப்பை ஏற்படுத்தக் காரணம். வன்னிப் பேரவலம் தொடர்பாக ஏற்கனவே பல்வேறு நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து உடனடியாக யுத்தநிறுத்தம் ஒன்று கொண்டு

மோதலை முடிவுக்கு கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் மூன்று தரப்புகளால் கொடுக்கப்பட்டது

வரப் பட்டு எமது மக்கள் உயிரழிவுகளிலிருந்து பாதுகாக்கப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருந்தோம். அப்பொழுதெல்லாம் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என வினா எழுப்பினார்கள். ஐக்கிய ந்ாடுகள் சபையின் அதிகாரிகளைச் சந்தித்த போதும் இவற்றை நாம் வற்புறுத்தியிருந்தோம்.

அந்தவகையில் இலங்கை அரசுக்கு உரிய அழுத்தத்தை கொடுக்கக்கூடிய மிக முக்கிய நாடு இந்தியாதான். எனவேதான் நான் இவ்வாறான சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு இந்தியாவில் தங்கியிருந்த எமது கட்சித் தலைவர் சம்பந்தனை வற்புறுத்தினேன். எமது மக்களைக் காப்பாற்றுவது தொடர்பாக இந்திய மத்திய அரசுடன் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனையடுத்து அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தன் மேற்கொண்டிருந்தார். எமது இந்தச் சந்திப்பை மனச்சாட்சியுள்ள விடுதலைப் போராட்டத்தில் விசுவாசமுள்ள எந்தவொரு தமிழ்மகனும் பிழை என்று சொல்லமாட்டான்.

இந்தச் சந்திப்பில் ஒரேயொரு விடயத்தை மட்டமே நாம் இந்திய அரசிடம் முன்வைத்தோம். அதைத்தான் பேசவும் நினைத்தோம். வேறு எந்தவொரு விடயம் பற்றியும் நாம் இந்தச் சந்திப்பின்போது பேசவில்லை. நாம் கேட்டுக் கொண்டதெல்லாம் யுத்தநிறுத்தம் மட்டுமே.

நாங்கள் தான் இந்திய அரசைச் சந்திப்பதற்கு அனுமதி கோரியிருந்தோம். இந்தியா தான் எங்களைச் சந்திக்க அழைத்தது என்பதில் உண்மையில்லை. உடனடியாக ஒரு யுத்தநிறுத்தம் ஏற்பட இந்திய அரசு தனது செல்வாக்கை முழு அளவில் பயன்படுத்தவேண்டுமென நாம் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுத் துறைச் செயலர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரிடம் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தி னோம். இதனைத்தான் இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்துவதையும் நாம் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினோம். மனிதாபிமானச் சட்டங்களுக்கு விரோதமாக யுத்த முனையில் பாவிக்கக்கூடாத இரசாயனக் குண்டுகளை வீசி இலங்கை இராணுவம் எமதுமக்களை அழிப்பதாக எமக்குக் கிடைத்த தகவல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மூலம் விசாரணை நடத்திப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டோம்.

கேள்வி: முக்கியமாக என்ன கோரிக்கைகளை முன்வைத்தீர்கள்?

பதில்: தமிழ் மக்களின் உயிர்வாழும் உரிமை பாதுகாக்கப்படவேண்டும். அதற்காக இந்தியா முதலில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த முற்படவேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கை. இது தொடர்பாக ஒரு கடிதம் ஒன்றையும் இந்தியப் பிரதமரிடம் கையளிக்குமாறு இந்தியப் பாதுகாப்பு ஆலோசகரிடம் ஒப்படைத்திருந்தோம். இவ்வாண்டு முதல் மூன்று மாதங்களுக்கிடையில் 5 ஆயிரம் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். 10 ஆயிரம் பேர் படுகாயமடைந்துள்ளார்கள் என்ற விவரங்களையும் நாம் இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டியிருந்தோம்.

எம்மைச் சந்தித்த பின்னர் அடுத்தநாள்

ஈழத்தமிழருக்கு ஆதரவான கருத்துகள் தமிழகத்தில் வலுப்பெற்றிருப்பது எமக்கு ஆறுதல் அளிக்கிறது

பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுத் துறைச் செயலர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் எமது கடிதத்தையும் கொண்டு சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தனர். அன்று மாலை இந்திய அரசு சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. விடுதலைப் புலிகளைத் தாக்குவது என்ற பெயரில் அங்குள்ள தமிழ்மக்கள் கொலைசெய்யப்படுவதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. போர் நிறுத்தம் தொடரப்படவேண்டும் என அந்த அறிக்கையில் கேட்கப்பட்டிருந்து. முன்னரை விட இந்த அறிக்கையில் அதிக அழுத்தம் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

எனினும் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருப்பதை விடுத்து இந்தியா இந்தப் பிரச்சினையில் நேடியாகத் தலையிடவேண்டும். சர்வதேசத்துடன் தொடர்புகொண்டு போரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நாம் மீண்டும் வலியுறுத்தினோம். அதனை விட தமது போர் நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு ஆதரவளிப்பதாக இலங்கை அரசு நாடாளுமன்றத்தில் கூறியதையும் நாம் இந்திய அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியிருந்தோம். இந்தக் கருத்தின் மீது தமிழ் மக்களும் நாங்களும் மிகுந்த கவலை கொண்டுள்ளதையும் தெளிவுபடுத்தினோம்.

இந்திய அரசு இந்த யுத்தத்தை நிறுத்தித் தமிழ்மக்களின் விடுதலையையும் விடிவையும் உறுதிப்படுத்த இதயசுத்தியோடு உரிய நடவடிக்கை எடுக்காதுவிட்டால் எமது மக்கள் கொல்லப்படுவதற்கான பொறுப்பையும் இந்திய அரசு ஏற்கவேண்டிவரும் எனவும் இந்தச் சந்திப்பில் நாம் எடுத்துக் கூறியிருந்தோம்.

இதனையடுத்து இலங்கையில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக இந்தியத் தரப்பால் [16.04.2009 அன்று] எமக்கு உறுதியளிக்கப்பட்டது. இந்த விடயத்தில் தனது சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கிறது என்பதை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கு உள்ளது. அதற்குச் சரியான தருணமும் இதுதான்.

கேள்வி: இந்தியத் தலைவர்களைச் சந்திப்பது தொடர்பாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் கருத்து வேறுபாடு இருந்ததா?

பதில்: ஆம். கொழும்பில் தங்கியிருந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அரசின்மீது அதிருப்தி அடைந்திருப்பதை வெளிப்படுத்தியிருந்தார்கள். எனக்கும் இந்திய மத்திய அரசின் போக்கில் மிகுந்த கவலை இருந்தது. அதை நாங்கள் கூட்டம் ஒன்றில் பகிர்ந்துகொண்டோம். ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பையும் ஏற்றுப் பேசவேண்டும் என்று கோரியிருந்தார்கள்.

தமிழர்கள் கொல்லப்படுவதற்கான பொறுப்பை இந்தியா ஏற்கவேண்டி வரும்

அதே உறுப்பினர்கள் இந்திய அர்சைச் சந்திப்பதையும் நிராகரிக்க வேண்டுமெனக் கூறினார்கள். அதனை நான் சென்னையிலிருந்த கட்சித் தலைவர்களுடன் கூடிக் கலந்துரையாடிக் கூறுவதாக அவர்களுக்குச் சொல்லியிருந்தேன். தங்களது கருத்துக்களை திரு.சம்பந்தனிடம் கூறுமாறு அவர்கள் கேட்டிருந்தார்கள்.

இப்படியானதொரு முக்கியமான சந்தர்ப்பத்தில் இந்திய வெளியுறவுத்துறைச் செயலரை வற்புறுத்தி சந்திப்புக்கான திகதியைப் பெற்ற பிறகு அதனை நிராகரிப்பது முறையல்ல. ஏனெனில் நாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே அந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

சென்னையில் நாம் கூடிப் பேசிய பின்னர் திருவாளர்கள் சம்பந்தன், சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் நானும் சந்திப்பில் கலந்துகொள்வதற்காகச் சென்றோம்.

கேள்வி: இந்தச் சந்திப்பு முன்னர் இந்திராகாந்தியிடம் உதவி கேட்டது போன்றதொரு சந்திப்பா?

பதில்: அப்படிப் பார்ப்பதற்கும் இடம் உள்ளது. அதனை விட குடாநாட்டில் உள்ள 40ஆயிரம் இராணுவத்தினரைக் காப்பாற் றுமாறு சந்திரிகா அரசு அன்றைய இந்திய அரசிடம் கோரியிருந்தது. அதனை ஏற்று இந்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது. தற்போது மோதலில் சிக்கியுள்ள இரண்டு லட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்களைக் காப்பாற்ற உங்களுக்கு உரிமை இல்லையா? என்றும் நாம் அவர்களிடம் கேட்டோம்.

கேள்வி: வேறு யாரைச் சந்தித்தீர்கள்?

பதில்: இந்திய எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் சந்தித்து அவர்களது நிலைப்பாடுகளையும் அறிந்தகொண்டோம். குறிப்பாக பா.ஜ.கவினரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம்.

கேள்வி: இந்தியாவில் தமிழக அரசின் நிலைப்பாடு என்ன?

பதில்: இப்போது இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகின்றது. அங்கு குறிப்பாகத் தமிழகத்தின் அரசியல் கட்சிகள் பல அணிகளாகப் பிரிந்துள்ளன. இப்போதைய தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை முக்கியம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. அங்குள்ள மாநில அரசும் சரி எதிரணியினரும் சரி இலங்கைத் தமிழருக்கு விடுதலை கிடைக்கவேண்டும், யுத்தம் நிறுத்தப்படவேண்டும் என்பதையே வலியுறுத்தி வருகின்றனர். இதுவரை 16 பேர் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகத் தமது உயிரை மாய்த்துள்ளனர். இவற்றுக்கெல்லாம் இந்திய மத்திய அரசு செவிசாய்க்கவில்லை என்ற கருத்து தமிழக மக்கள் மத்தியில் பரவிவுள்ளது.

இந்த நிலையில் இந்திய மத்திய அரசில் யார் பதவிக்கு வந்தாலும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக நாம் பேச வேண்டியவர்களாக உள்ளோம். இப்போது செல்வி ஜெயலலிதா தனி ஈழம் தான் தீர்வு என அறிவித்துள்ளார். மறுபக்கத்தில் தி.மு.க கூட்டணியில் ஓர் அங்கமாக உள்ள திருமாவளவன் தமிழீழம் தான் தீர்வு என மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். இவ்வாறு இந்தியாவின் தமிழகத்திலும் இலங்கைத் தமிழருக்கு ஆதரவான கருத்துகள் வலுப்பெற்றிருப்பது ஆறுதலளிக்கிறது.

கேள்வி: இந்தியாவுடன் மீண்டும் சந்தித்துப் பேசும் திட்டம் ஏதும் உள்ளதா?

பதில்: ஆம். இந்தியத் தேர்தல் முடிந்த பின்னர் இந்திய அரசியல் கட்சிகளைச் சந்தித்துத் தீர்வு தொடர்பாகப் பேசவுள்ளோம். அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்கவுள்ளோம். இந்திய அரசியல் கட்சிகளை எமது பக்கம் இழுக்க வேண்டும் அதற்காக நாம் தொடர்ந்து பாடுபடுவோம்.

கேள்வி: இலங்கை அரசு தற்போது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்துள்ளது. அது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

பதில்: சர்வதேச நாடுகளின் இடை விடாத அழுத்தம், புலம்பெயர்ந்த தமிழர்களின் போராட்டம், இந்திய அரசின் அழுத்தங்கள் ஆகியன இலங்கை அரசு மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றது என நான் நினைக்கின்றேன். விடுதலைப்புலிகளை ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைய வற்புறுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் இலங்கை அரசு கோரியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் புலிகளும் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்கள். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக இலங்கை அரசும் அறிவித்துள்ளது. எனினும் இராணுவம் இது ஒரு யுத்தநிறுத்தம் அல்ல என்ற கருத்தை வெளியிட்டுள்ளது. இது ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவித்துள்ளது. அரசின் அறிவிப்புப் போலியானதாகப் படுகின்றது. பிரபாகரன் கைது செய்யப்படும் நேரம் நெருங்கிறது என்கிறார் ஜனாதிபதி. இவை எல்லாம் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

எமது கருத்து தமிழர்களின் விடுதலைப் போராட்டம் தொடரப்படவேண்டும் என்பதே. காலத்தின் தேவை கருதி ஜனநாயக வழிகளிலும் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். என்ன காரணத்துக்காக விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்தினார்களோ அந்த இலக்கை இன்னும் அடையவில்லை. இதற்குப் பயங்கரவாதம் என்று பெயர் சூட்டுவது பொருந்தாது. அமெரிக்க வெளி விவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் பயங்கரவாதம் என்ன என்பது குறித்து சென்ற ஆண்டில் சரியான விளக்கம் ஒன்றைக் கொடுத்திருந்தார். எல்லாப் போராட்டத்தையும் பயங்கரவாதம் என்ற கூடைக்குள் போடமுடியாது. அவற்றின் மூல காரணங்களை அறிந்து அவற்றுக்குத் தீர்வு காணவேண்டியது அவசியமானது. அப்படிப்பட்ட மூல காரணங்களைக் கொண்டு போராடும் இயக்கங்களில் விடுதலைப் புலிகள், அன்பார், பஸ்க் ஆகிய இயக்கங்களை வேறுபடுத்திப் பார்க்கவேண்டுமெனக் கிலாரி கூறியிருந்தார். ஐரிஷ் விடுதலைக்காகப் போராடிய ஐ.ஆர்.ஏ இயக்கமும் பிரிட்டிஷ் அரசும் செய்து கொண்ட பெரிய வெள்ளி [1998] ஒப்பந்தத்தில் ஐ.ஆர்.ஏ. தனது ஆயுதங்களைக் கைவிடவேண்டுமெனக் குறிப்பிடப்படவில்லை. இவ்வுதாரணத்தை இலங்கையிலும் பின்பற்றலாம்.

கேள்வி: விடுவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வந்த மக்கள் நலன்புரி முகாம்களில் பெரும் இன்னல்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது. அது பற்றித் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏதாவது நடவடிக்கைகளை எடுத்துள்ளதா?

செவ்வி: அதிரன்

பதில்: இது தொடர்பாக நாம் ஐ.நா. அதிகாரிகளைச் சந்தித்தபோது அந்த மக்களை அந்தந்த மாவட்டத்திற்குள்ளேயே குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரினோம். இப்போது முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் பகுதியில் வெளியேற்றப்பட்ட மக்களை விட எஞ்சிய 40 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் பொது மக்கள் உள்ளனர். அந்த மக்களை வெளியேற்ற வேண்டும் என்ற கருத்தை நாம் முற்றாக எதிர்க்கிறோம். ஐ.நாவின் முகாமைத்துவத்தில் அந்த மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதே எமது திட்டவட்டமான கருத்து. அந்த மக்களை வெளியே கொண்டு போய் அரசியல் அடிமைகளாக நடத்த அரசு விரும்புகின்றது. முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தில் எஞ்சியுள்ள மக்களைப் பார்வையிட ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். உடனடியாக ஐ.நா. பிரதிநிதிகள் அங்கு அனுமதிக்கப்படவேண்டும்.

அத்துடன் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தமது போராட்டங்களை மேலும் விரிவுபடுத்தி எமது மக்களைக் காப்பாற்ற வேண்டும். புலம் பெயர்ந்த மக்களும் உள்நாட்டில் உள்ளவர்களும் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு, உடை, மருந்து வகைகள் என்பவற்றை வழங்க முன்வரவேண்டும்.

எச்.என்.பி.அசூரன்சின் உள்ளக விற்பனை மேம்படுத்தல் போட்டி கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்டது.
இதற்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் எச்.என்.பி.அசூரன்சின் யாழ்.கிளைப் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.
போட்டியில் வெற்றிபெற்ற வெற்றியாளர்களில் ஒருவருக்கு வலய முகாமையாளர் எஸ்.எம்.புவிராஜ் வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் குழு உதவி முகாமையாளர் பி.ஏ.அலன் கியூமர் தலைமையுரையாற்றுவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டவர்களை மூன்றாவது படத்தில் காணலாம்.

பிரபாகரனைப் பாதுகாக்க அமெரிக்கா முற்பட்டால் வியட்நாமில் கற்ற பாடத்தை அவர்களுக்குப் புகட்டுவோம்

அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.30

எமது பிரச்சினையில் அத்துமீறித் தலையிட்டு பிரபாகரனைப் பாதுகாப்பதற்கு முற்பட்டால் வியட்நாமில் கற்ற பாடத்தை அமெரிக்காவுக்கு புகட்டுவோம் என ஜாதிகஹெல உறுமய கட்சியின் அரசியல் ஆலோசகரும் சுற்றாடல் துறை அமைச்சருமான சம்பிக்க ரணவக்க கடுமையாக எச்சரித்திருக்கின்றார்.

கொழும்பு நூலக ஆவண கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு கடுமையான தொனியில் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் முக்கியமாக குறிப்பட்டதாவது:

சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா போன்றன பொருளாதாரத்தில் இன்று வளர்ச்சியடைந்திருப்பதுடன் வல்லரசுகளாகவும் உயர்ந்திருக்கின்றன. இந்நிலையில் பொருளாதாரத்தில் வீழ்ச்சிகண்டுவரும் அமெரிக்காவால் தெற்காசியாவில் வாலாட்ட முடியாது.

எமது பிரச்சினையில் அத்துமீறித் தலையிட்டு பிரபாகரனைப் பாதுகாப்பதற்கு அமெரிக்கா முனைந்தால் வியட்நாமில் கற்ற பாடத்தை அமெரிக்காவுக்கு நாம் புகட்டுவோம். அமெரிக்காவின் மிரட்டல்களுக்கு நாம் அஞ்சப்போவதில்லை.

விடுதலைப் புலிகள் நடத்தியுள்ள கிளைமோர் தாக்குதல்களுக்கு பிரித்தானியாவே பொறுப்புக்கூற வேண்டும். ஏனெனில் அந்த அரசாங்கம் பாதுகாப்பு வழங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களின் தொலைபேசி அழைப்புக்களின் மூலமே இவை நடத்தப்பட்டுள்ளன.

இதனைவிட அ டேல் பாலசிங்கம் உட்பட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலருடனும் பிரித்தானியாவின் உளவுப் பிரிவுகள் உறவுகளைப் பேணிவருகின்றன.

இவ்வாறு சம்பிக்க ரணவக்க தனது உரையில் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரரும் அமெரிக்காவைக் கடுமையாகத் தாக்கினார். அவர் தனது உரையில் முக்கியமாகத் தெரிவித்ததாவது:

டோக்கியோ இணைத் தலைமை நாடுகள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊடாக விடுதலைப் புலிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என அச்சுறுத்தல் ரீதியாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. இது எமது நாட்டின் இறையாண்மையை மீறும் ஒரு நடவடிக்கையாகும்.

அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விடுதலைப் புலிகளை ஒழிக்கும் நடவடிக்கையைப் பொறுத்தவரையில் இதுவரையில் எந்தவொரு நாட்டுக்கும் அடிபணியவில்லை- என்றார். (50)

பெறுபேறுகளைப் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், ஏப்.30

அரச மொழிகள் திணைக்களத்தால் அரச உத்தியோகத்தர்களுள் வெளிவாரி தோற்றுனர்களாக சிங்கள மொழி மட்டம் III ஆங்கில மொழி - உயர்தரம் ஆகியவற்றுக்கு 2008ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம் என யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் அறிவித்துள்ளது. (201)

பிரிட்டன் அரசுக்கு எதிராக அந்நாட்டு சட்டத்தரணிகள் வழக்கு?

கொழும்பு, ஏப்.30

இலங்கை விவகாரத்தில் பிரிட்டன் அரசாங்கம் சர்வதேச சட்டங்களுக்கு புறம்பான வகையில் செயற்பட்டுள்ளதாகவும், அதற்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாகவும் அந்நாட்டு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்திற்கு பிரிட்டன் உதவிகளை வழங்குதவன் மூலம் அங்கு இடம்பெற்று வரும் மனிதாபிமான பேரவலத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுவிடும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரிட்டன் அரசாங்கம் சர்வதேச சட்டங்களை மீறும் பட்சத்தில் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என குறித்த சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரிட்டன் வாழ் தமிழ் மக்களினால் உருவாக்கப்பட்ட 'ஜஸ்டிஸ் போ டெமில்ஸ்' அமைப்பு, மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோர் பிரிட்டன் அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் பல்வேறு வழிகளில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாகவும், தமிழ் பொதுமக்கள் திட்டமிட்ட வகையில் இனச் சுத்திகரிப்பிற்கு உட் படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் சூழ்நிலையில் சர்வதேச மனிதாபிமான சட்டதிட்டங்களுக்கு அமை வாக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு பிரிட்டன் அரசாங்கத்திடம் காணப்படு வதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் உடனடியாக யுத்த நிறுத்தமொன்றை அமுல்படுத்த பிரிட்டன் அரசாங்கம் அதிக முனைப்புப் காட்ட வேண்டுமென குறிப்பிடப்படுகிறது. (203)

தீவகம் தெற்குப் பிரதேசசபை- வேலணை

கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:
04.05.2009 முதல் 07.05.2009 பிற்பகல் 1 மணி வரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி:
11.05.2009 நண்பகல் 12 மணி வரை

கேள்வி திறக்கும் திகதி: 11.05.2009 பிற்பகல் 1.30 மணி

வேலை விவரம்	மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு	மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட)	இக்ராட் பதிவு தரம்
சந்தைக் கட்டடத் திருத்தம்- உப அலுவலகம், புங்குடுதீவு	4880.00	560.00	M9/C10
தீர்த்தக்கரை வீதி திருத்தம்- நயினாதீவு (கிரவல்)	4900.00	560.00	M9/C10
மண்டைதீவு உப அலுவலக சுற்றுமதில் திருத்தம்	8000.00	560.00	M9/C10
சுற்று மதில் அமைத்தல் பகுதி-II தலைமைப் பணிமனை, வேலணை	7000.00	560.00	M9/C10

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்வி இக்ராட் தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்தும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களிடமிருந்தும் எம்மால் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் இரு பிரதிகளில் **செயலாளர், தீவகம் தெற்கு பிரதேசசபை, வேலணை** என முகவரியிடப்பட்டு கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் விவரத்தை குறிப்பிட்டு எமது அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியிலோ அல்லது பதிவுத் தபாலிலோ எமக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி திறக்கும் போது கேள்விக்காரரோ அல்லது அவர் சார்பான பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்
செயலாளர்,
தீவகம் தெற்கு பிரதேசசபை,வேலணை.

தீவகம் தெற்கு பிரதேசசபை,
வேலணை.
29.04.2009

(சி/558253)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பொதுமுகாமையாளர்- தரம் 101/07

பதவி வெற்றிடம் விண்ணப்பம் கோரல்

01. **சம்பள அளவுத் திட்டம்**
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 66/2006 அமைய 11450- 14500 / 145x10- 160x10

02. **தகைமைகள்**
   - அ. கூட்டுறவுப் பணியாளர் 8ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

     அல்லது

   - ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்
   - இ. கூட்டுறவு உயர் தராதரப்பத்திரம்/ க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 8 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

03. **வயதெல்லை:** 18-45

04. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப் பங்களைக் கடமையாற்றும் சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப் பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுத்துமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் ரூபா 25/= செலுத்திச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் **''தலைவர், சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை''** என விலாசமிட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 15.05.2009

தலைவர்
சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை.

(சி/558254)

வரலாற்றில் இந்த வாரம்

ஏப்ரல் - 24

வெள்ளையர்களை விரட்ட இந்திய தேசியப் படையை உருவாக்கிச் செயற்பட்டவர் சுபாஷ் சந்திர போஸ். அவர் தன் தோழர்களுக்கும் படை வீரர்களுக்கும் தேசத்திற்கும் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் திகதி சிங்கப்பூரில் இருந்து செய்தி ஒலிபரப்பினார்.

ஏப்ரல் - 25

றேடியோ எனப்படும் நவீன சாதனத்தைக் கண்டு பிடித்து உலகில் புரட்சி உண்டாக்கிய இத்தாலி நாட்டு விஞ்ஞானியான மார்க்கோணி 1887 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி தான் இறந்தார்.

ஏப்ரல் - 26

றொபின்சன் க்ரூசோ என்னும் சாகசங்கள் நிறைந்த அற்புதமான (சிறுவர்) நவீனத்தை உருவாக்கி புகழ் பெற்ற டானியல் டிஃபோ 1731 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 இல் இறந்தார்.

ஏப்ரல் - 27

மின்சாரம் மூலம் செய்திகளை அனுப்பும் தந்தி முறையையும் அதற்கு ஒரு கருவியையும் கண்டு பிடித்த சாமுவேல் பில்லே பிரீஸ் மோர்ஸ் 1791 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி அமெரிக்காவில் பிறந்தார்.

ஏப்ரல் - 28

இரண்டாம் உலகப் போர் இறுதிக் கட்டத்தை நெருங்கிய வேளையில் இத்தாலி நாட்டு சர்வாதிகாரியான முசோலினி சுவிற்சர்லாந்துக்கு தப்பியோட முயன்ற போது 1945 ஆம் ஆண்டு 28 ஆம் திகதிதான் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஏப்ரல் - 29

சுப்புரத்தினம் என்ற தனது பெயரை பாரதிதாசன் என மாற்றிக்கொண்ட பாவேந்தர் பாரதிதாசன் 1890 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி பாண்டிச்சேரியில் பிறந்தார்.

ஏப்ரல் - 30

சர்வாதிகாரி ஹிட்லர் தன்னுடைய மரணத்தை தழுவிய நாள் 1945 ஏப்.30 இல் தான்.

சமாதானமே வா!

இலங்கை எனும் சிறுதீவில்
இனமத முரண்பாடு நீங்கி
இன்னல்கள் களைந்து
உறவுகள் ஒன்று சேர்ந்து
இதமாய் வாழ
வெண்புறா வடிவம் கொண்டு
வெற்றி நடைபோடும்
வெள்ளை மனம் கொண்ட
சமாதானமே விரைந்து வா!

க.தக்ஷிகா, தரம் 10,
யா/இந்து மகளிர் கல்லூரி.

சிந்தனைக்குச் சில வரிகள்

- அதிர்ஷடம் தராததை திருப்தியிடமிருந்து பெறுவோமாக.
- அமைதியைத் தேடு அதுவே உன் வாழ்க்கையின் சந்தோஷமான அணைக்கட்டு.
- வருவதைக் கண்டு மயங்காதே. போவதைக் கண்டு கலங்காதே.
- புத்தி உள்ள மனிதர் எல்லாம் வெற்றி காண்பதில்லை. புத்திக்கும் வெற்றிக்கும் சம்பந்தம் இல்லை.
- வாழ்க்கையில் எந்த உணர்வும் கால வெள்ளத்தில் கரைந்துவிடும். இப்போது இருக்கும் அன்போ, நட்போ, பாசமோ எப்போதும் இருக்கும் என்று சொல்வதிற்கில்லை. வெகு அபூர்வமாகத்தான் அவை நிரந்தரமாக இருப்பதுண்டு.
- அறத்தினால் பெறுவதே இன்பம் மற்றவைகளால் பெறுபவை துன்பங்களே.
- ஊரோடில் ஒத்தோடு ஒருவன் ஓடில் கேட்டோடு.
- வீதியில் கார் ஓடுகிறது காரில் வீதி ஓடுமா?
- சந்தர்ப்பம் என்பது ஒரு சகதி நிலம். அதில் வழுக்கி விழாதவர்களே கிடையாது
- முறிந்த கையைக் கொண்டு உழைக்க முடியும். ஆனால், உடைந்த உள்ளத்தைக் கொண்டு உழைக்க முடியாது.
- நண்பனை ஆபத்தில் தெரிந்து கொள்ளலாம். வீரனை போர்க் களத்தில் தெரிந்து கொள்ளலாம். நேர்மையானவனைக் கடன் கொடுத்து அறிந்து கொள்ளலாம்.
- மனித மனம் என்றும் திருப்தியடைவதில்லை. பூனைக்கு யானையை விழுங்க ஆசை என்ற எண்ணத்தைப் போன்றது.
- முடியாது என்பது கிடையாது என்பதற்கு சமன்.
- வாழ்வில் சங்கடங்கள் வரும்போது அதைக் கண்டு கலங்காதே. அந்தச் சங்கடங்களையும் சந்தர்ப்பங்கள் ஆக மாற்று அது உனக்கு சாதகமாக அமையும்
- மனம் பந்தயக் குதிரை போன்றது.
- முதலில் நாம் எம்மை வெல்ல வேண்டும்.

இ.கவிதா,
காஞ்சிபுரம், மாதகல்.

ராடர் கருவியின் பயன்பாடுகள்

ரேடியோ அலைகள் என்பவை மின்காந்த அலைகள் ஆகும். ரேடியோ அலைகள் ஏதாவது ஒரு பொருள் மீது மோதினால் அவை பிரதிபலித்துத் திரும்புகின்றன. இந்த அலைகள் திரும்பும் நேரத்தைக் கணக்கிட்டு அந்தப் பொருள் எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

ஒரு பொருளின் இருப்பிடத்தையும் தொலைவினையும் ரேடியோ அலைகளைக் கொண்டு அறிதல் Detection and Ranging என்பதற்கான ஆங்கில சொற்றொடரின் சுருக்கமே ராடர் (Radar) ஆகும்.

ராடர் கருவியைக் கண்டு பிடிப்பதற்கு வௌவால் வழிகாட்டியாக இருந்தது எனலாம். வௌவால்கள் பழைய மண்டபங்களிலும் குகைகளிலும் மிகவேகமாகப் பறந்தாலும் அவை எதன் மீதும் மோதிக் கொள்வதில்லை. மிகக் கூர்மையான கண் பார்வை இருப்பதே இதற்குக் காரணம் என்று முதலில் எல்லோரும் கருதினர். ஆனால் வௌவாலின் கண்களைக் கட்டிய பின்னரும் அது எங்கும் மோதிக் கொள்ளாமல் பறப்பதைக் கண்டார்கள். வாயையும் காதையும் கட்டியபோது அவை நிலை தடுமாறின. இதிலிருந்து வௌவால் எழுப்பும் ஒலி பொருளின் மீது மோதித் திரும்புவதிலிருந்து எதிர்ப்படும் தடைகளை அது அறிந்து விலகிச் செல்கின்றது என்று விஞ்ஞானிகள் முடிவு செய்தார்கள். இந்த ஆராய்ச்சியே ராடர் அமைப்பதிலும் பின்பற்றப்படுகின்றது. ஆனால் ராடரில் ஒலிக்குப் பதிலாக ரேடியோ சிற்றலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒலி அலைகள் வினாடிக்கு முன்னூற்று முப்பது மீற்றர் வேகத்தில் செல்கின்றன. ஆனால். ரேடியோ அலைகள் வினாடிக்கு மூன்று லட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் செல்கின்றன. அதாவது ஒரு மைக்ரோ விநாடியில் முன்னூறு மீற்றர் தொலைவு செல்கின்றது. ஒரு பொருளின் மீது மோதி ஒரு மைக்ரோ வினாடியில் திரும்பினால் அந்தப் பொருள் நூற்று ஐம்பது மீற்றர் தொலைவில் இருக்கின்றது என்று அறிந்து கொள்ளலாம்.

அலைகள் ஒரு பொருளின் மீது பட்டுத் திரும்பி வருவதற்கு ஆகும் நேரத்தை ராடர் கருவியே கணக்கிட்டுத் தெரிவிக்கின்றது.

யுத்தம் நடைபெறும் பொழுது ராடா கருவி மிகவும் பயன்படுகின்றது. எதிரி விமானங்கள் நெருங்குவதை முன்னதாகவே நொடிப் பொழுதில் அறிந்து கொள்ள ராடர் கருவியைப் பயன்படுத்துகின்றனர். விமானங்களிலும் கப்பல்களிலும் நீர் மூழ்கிக் கப்பல்களிலும் ராடர் சாதனத்தைப் பொருத்தியுள்ளனர்.

இதனால் எதிரிகளின் கப்பல்கள் நடமாடும் இடங்களைத் தெரிந்து கொள்வதும் நீர் மூழ்கிக் கப்பல்களை அழிப்பதும் எளிதாகிறது. இருளாக இருந்தாலும் மூடு பனி அல்லது மேகங்கள் சூழ்ந்திருந்தாலும் கூட ராடர் அபரிதமாகச் செயற்படக்கூடியது.

ராடர் போர்க்களத்தில் மட்டுமின்றி சமாதான காலத்திலும் பல வழிகளில் பயன்படுகிறது. விமான நிலையங்களில் வானூர்திகள் ஒழுங்காகத் தரையிறங்கவும் கப்பல்கள் மூடுபனியின் போது பாறைகளில் மோதுவதைத் தவிர்க்கவும் மிகவும் விரைவாகச் செல்லும் மின்சார ரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகாமல் தவிர்க்கவும் ராடர் பயன்படுகிறது.

காரை தருமலிங்கம் முரளீதரன், மொந்திப்புலம், காரைநகர்.

இளவல்கள் வட்டம்

இளையோர் காணும் சமுதாயத்தை படைப்பதற்கு ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம்

இன்று யாழ்.குடாநாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களால் சமூகத்தில் ஏற்பட்ட பல்வேறுபட்ட சமூக அநீதிகள், ஏழ்மை, சமூக ஏற்றத்தாழ்வு, சாதி வெறி, சமய ரீதியான பாரபட்சங்கள், அடிப்படை உரிமை மறுப்பு, போலித்தனம் போன்றவற்றைக் கண்டு பொறுக்க இயலாத இன்றைய கட்டிளமைப் பருவத்தினர் கொதித்தெழுகின்றனர். தங்கள் வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள ஆசைப்படுகின்றனர். நான் யார்? நான் என்ன செய்கிறேன் ? நான் ஏன் வாழ்கிறேன் ? என் வாழ்வின் பொருள் (அர்த்தம்) உண்டா? என பல கேள்விகளுக்கு விடைகாண முயல்கின்றனர். இதனால் முழு உலகத்தையும் நடுங்க வைக்கும் கேள்விகளை கேட்கின்றனர். போலி முகமூடிகளையும் பொய் வேசங்களையும் களைய முயற்சிக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் இப்புதிரின் விடை புரியாதவர்களாய் சமூக நியமங்களுக்கும் ஒழுக்க விதிமுறைகளுக்கும் முரணாக தற்கொலை முயற்சி, தனிமையை நாடல், மதுபோதைக்கு அடிமையாதல், மற்றையவர்களில் தங்கியிருத்தல் போன்றவற்றுக்கு காரணமாகின்றனர். சிலர் இதனை தட்டிக் கேட்க முயல்கின்றனர்; விடை தேட வேட்கை கொள்கின்றனர். இவர்களது இத்தகைய செயல்கள்கண்டு அதன் ஆழத்தைத் தேடிப் பார்ப்போமேயானால் சமுதாய இடை வெளி அகற்றி, போலித்தனங்களை ஓரங்கட்டி வாழ்வியலின் மதிப்பீடுகளையும் வாழ்வின் பொருளை தேடவும் மனித உறவுகளை ஆழப் படுத்தவும் துடிக்கின்றனர் என்பது எமக்கு வெளிச் சமாகும்.(வளரும்)

மேன் மக்கள் தினம்

மேன் மக்கள் புகழ்பாட
மேலகமும் மனங் கோணும்
பெருமை தரும் மேம்பாடு
பாரிடமும் உறவாகும்
வியர்ப்புதனை உரமாக்கி
வில்லங்கம் வென்றவரே!

காலடியில் உழைப்பிருக்க
காலமெல்லாம் ஊதாரியாய்
பழிச் சொல்லுக் கிரையாகும் - எமக்கு
பரிகாச வாழ் வெதற்கு
இனிதான வாழ் வமைக்க
இதாகிதம் அறிந்திடுவோம்!

களிமண் சாதத்துக்காய்
களிப்புடனே சிதல் களெல்லாம்
சற்றேனும் சளைக்காமல்
சுறுசுறுப்பாய் சேகரிக்கும்
இதுகளின்ர சிறிதெண்ணம்
எமக்குண்டோ சொட்டேனும்!

வேலையில்லாப் பட்டதாரி நானென் போர்
கேளிக்கை வாழ்வெமக் கினிதென்பர்
மூடர்கள் இவர்கள் - என்றும்
முடவர்களே - இந்த
மடமை போக்கி நிதம்
மகுடம் சாத்திடுவோம்!

எறும் பெனவே உழைத்திடுவோம்
ஏற்றமான வாழ்வு காண
உழைப்பவர்கள் சளைப்பதில்லை
சகதியிலும் வீழ்வதில்லை
தாறணை கொண்டு ழைக்கும்
மேன் மக்கள் தினம் வாழ்க!!

அ.எட்மன் தாஸ், குருநகர்.

கேள்விக்கு என்ன பதில்? -23

அது ஒரு பயங்கரமான பள்ளங்கள் நிறைந்த வீதி. கொஞ்சம் கவனம் தவறினாலும் வீதியால் செல்லும் வாகனங்கள் பள்ளத்துள் வீழ்ந்துவிடும். வீதியின் எவ்வித விளக்குகளும் இல்லை. இந்நிலையில் ஒரு அமாவாசை நாளில் லொறி ஒன்று எந்தப் பள்ளத்துக்குள்ளும் விழாமல் வீதியைக் கடந்தது. (லொறிக்கும் மின்விளக்குகள் இல்லை) அது எப்படி?

(10.05.2009 இற்கு முன்னர் விடைகளை அனுப்பி வைக்கவும்)

கேள்விக்கு என்ன பதில் 22 இன் சரியான விடை

17 மாடுகள்

கேள்விக்கு என்ன பதில்? - 22- பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு - செல்வி தயாந்தி குலராசசிங்கம், வீரகத்திப் பிள்ளையார் கோயிலடி, உடுப்பிட்டி.

இரண்டாம் பரிசு - வே.ஜெயப்பிரதா, இல.02, பிரம்படிலேன், தலையாழி, கொக்குவில்.

மூன்றாம் பரிசு - ம.சுபாகரன், மணற்பகுதி, புத்தூர்.

இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..
முகவரி :-..
:-..
....
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தரம் - 05 புலமைப் பரிசில்
மாணவர்களுக்கான
தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

வினாத்தாள் - II நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து அதன் கீழ் அமைந்துள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினை எழுதுக.

மழை பொழியுது மழை பொழியுது
  மழை பொழியுதடீ
மரத்தில் இருந்த குருவியோட
  மழை பொழியுதடீ
கூரை மீது தாரையாகக்
  குதித்துப் பாயுதடீ
கோழிச் சேவல் குளிர்ந்து சோர்ந்து
  கூனிப் போகுதடீ

01)மழை எவ்வாறு பொழிகின்றது?

………………………………………………………………

02)இப்பாடலில் விவரிக்கப்படும் காட்சி எது?

………………………………………………………………

03)இங்கு கூறப்பட்டுள்ள ஒலிக்குறிப்புச்சொல் எது?

………………………………………………………………

04)மரங்கள் + எல்லாம் என்பதைச் சேர்த்து எழுதுக.

………………………………………………………………

05)துள்ளிப்பாய்வது எது?

………………………………………………………………

06)"துள்ளிப்பாய்தல்" என்றால் என்ன?

………………………………………………………………

07)பாடலில் வந்துள்ள உயர்திணைப் பெயர்ச்சொல் எது?

………………………………………………………………

08)மரம் என்பதற்குரிய ஒத்த கருத்துச்சொற்கள் 2 தருக.

………………………………………………………………

09)"சிறிய கன்று தாயை நோக்கி துள்ளிப்பாயுதடீ" என்பதில் உள்ள எழுவாய் யாது?

………………………………………………………………

10)பாடலில் வந்துள்ள சினைப்பெயர்ச்சொல் யாது?

………………………………………………………………

02. அருகில் உள்ள எழுத்துக்களைக்கொண்டு இடைவெளிகளை நிரப்புக. (ண, ல், ள், ன, ழ், ந)

1) நரியின் வா ………………… மிகவும் நீளமானது.
2) பூவின் நறு ம ………………… ம் எங்கும் பரவியது.
3) போதும் என்ற ம ………………… மே பொன் செய்யும் மருந்து.
4) வீரன் வா ………………… கொண்டு போரிட்டான்.

03. பின்வரும் சொற்களின் கருத்தைத்தரும் பழமொழிகளை எழுதுக.

1) தொடர்ந்து [illegible]சித்தால் வெற்றி நிச்சயம்.

………………………………………………………………

2) மனத்திருப்தி நல்ல வாழ்க்கையைத்தரும்.

………………………………………………………………

04. பின்வருவன அறிவித்தலா?/ அறிவுறுத்தலா? என எழுதுக.

1) நாளை பரீட்சை நடைபெறும் ………………………………
2) உங்கள் பாடப்புத்தகங்களை உறைபோட்டுப் பேணுங்கள்.
………………………………

05. பின்வரும் சொற்களை ஒழுங்கமைத்து கருத்துள்ள வசனமாக்குக.

1) வாங்கி / விற்கப்படும் / கூடாது / தின்பண்டங்களை / வீதிகளில் / உண்ண

………………………………………………………………

2) பருகுதல் / நீரையே / வேண்டும் / கொதித்தாறிய / நாம்,

………………………………………………………………

06. பின்வரும் தமிழ்ச்சொற்களுக்கான சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.

1) நன்றி - ………………………………
2) எழும்புங்கள் - ………………………………
3) இல்லை - ………………………………

07. பின்வரும் சிங்களச்சொற்களுக்கான தமிழ்க்கருத்தை எழுதுக.

1) வாடிவென்ன - ………………………………
2) சபசனிப்ப கொஹொமத - ………………………………

08. பின்வரும் ஆங்கிலச்சொற்களுக்கான தமிழ்க்கருத்தை எழுதுக.

1) Table - ………………………………
2) Principal - ………………………………
3) Box - ………………………………

09. பின்வரும் தமிழ்ச்சொற்களுக்கான ஆங்கிலக்கருத்தை எழுதுக.

1) பாடசாலை - ………………………………
2) சந்தை - ………………………………

10. சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அடையாளம் இடுக.

1) பறவைகளுக்கு பற்கள் இல்லை. (……………………)
2) குயில்கள் குளிர்காலத்தில் கூவாது. (……………………)
3) எலிகள் அனைத்து நாடுகளிலும் உள்ளன. (……………………)
4) பல்லி நீர் அருந்துவதே இல்லை. (……………………)
5) சுண்டெலிக்கு வியர்க்காது. (……………………)

11. சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

01)பலா இலையின் நிறம்,
1) கரும்பச்சை. 2) இளம்பச்சை.
3) மஞ்சள். 4) கபிலம்.

02)பின்வரும் பூக்களிடையே நறுமணம் வீசும் பூ,
1) காட்டு மல்லிகை. 2) போகன்பில்லா.
3) வாடா மல்லிகை. 4) மல்லிகை.

03)அகத்தி இலையின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ள தாவர இலை எது?
1) புளியமரம். 2) பொன்னாங்கண்ணி.
3) வல்லாரை. 4) தொட்டாற்சுருங்கி.

04)வித்தின் வளர்ச்சிக்கு அவசியம் அல்லாதது,
1) வளி. 2) ஒளி.
3) நீர். 4) வெப்பம்.

05)குறுகிய காலத்தில் முளைக்கும் வித்து,
1) நெல். 2) சோளம்.
3) மிளகாய் 4) யாவும் சரி.

06)விஜய அரசன் குவேனியை சந்திக்கக் காரணமாக அமைந்த பிராணி எது?
1) பூனை. 2) யானை.
3) நாய். 4) கரடி.

07)பென்குயின் பறவையில் காணப்படாத இயல்பு,
1) அலகு உண்டு. 2) இறகு உண்டு.
3) கால் உண்டு 4) சிறகு உண்டு.

08)தூரியன் பூவை நாடிவரும் பிராணி,
1) அணில். 2) தேன்சிட்டு.
3) வெளவால். 4) காகம்.

09)சமையல் அறையில் பீங்கான் கோப்பைகளை சுத்தம் செய்யப் பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானது,
1) சாம்பல். 2) தேசிப்புளி.
3) அசற்றோன். 4) குளோரின்.

10)நாம் நாளொன்றுக்கு உணவில் எடுக்கவேண்டிய பிரதான போசணைகள்,
1) 1 2) 2
3) 3 4) 5

12. பின்வரும் தாவர இலைகளையும், வீதிக்குறியீடுகளையும் அடையாளம் காண்க.

1)

………………………………

2)

………………………………

3)

………………………………

4)

………………………………

5)



....

6)



....

13. பின்வரும் கணித வினாக்களுக்குரிய மிகச்சரியான விடையினை எழுதுக.

01) | 4 | 6 | 1 | 0 | ஆகிய இலக்கங்களைக்கொண்டு உருவாக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணிற்கும், மிகச்சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் எத்தனை? ....

02) இவ்வுருவில் இரு சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.



03) கீழுள்ள தளவுருக்களைக்கொண்டு ஆக்கக்கூடிய திண்ம உரு எது?



....

04) $\frac{4}{10}$ என்பதை தசமத்தில் எழுதுக. ....

05) 1099 இற்கு அடுத்து வரும் எண் யாது?

....

06) 0.32 + 0.9 = ...

07) (18 + 3), (26 + 5), (9 + 2), (11 + 2) என்பதை ஏறுவரிசைப் படுத்துக.

....

08) ரதியின் நிறை 21kg 750g அவளின் தாய் அவளை விட இரு மடங்கு நிறையானவர். எனின், இருவரினதும் மொத்த நிறை யாது?

....

09) வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய இலக்கங்களை எழுதுக.

$$\begin{array}{r} \square\,8\,3 \\ \square\,9\,6 \\ \hline 6\,7\,9 \\ \hline \end{array}$$

10) $\frac{1}{8} + \frac{2}{4} =$ ....

14. மாணவர் குழு ஒன்றுடன் அவர்களுக்கு விருப்பமான விளையாட்டுக்கள் பற்றி வினவப்பட்டு பெறப்பட்ட தகவல்கள் கீழுள்ள வரைபில் காணப்படுகின்றன. (காற்பந்தை எல்லோரும் விரும்பினர் என்க)



1) ஹொக்கியை 50 பேர் விரும்புகின்றனர் என்பதை உருவில் நிழற்றிக் காட்டுக. ....

2) கரப்பந்தை விட கிரிக்கட்டை எத்தனை பேர் அதிகமாக விரும்புகின்றனர்? ....

3) மொத்தமாக எத்தனை மாணவர்களிடையே கருத்து கேட்கப்பட்டது? ....

4) அதிகமானோர் எவ்விளையாட்டை விரும்புகின்றனர்? ....

5) வலைப்பந்தையும் ஹொக்கியையும் எத்தனை பேர் விரும்புகின்றனர்? ....

15. "நானும் எனது நண்பனும் பாடசாலை விட்டு வந்துகொண்டிருக்கும் போது வீதியோரத்தில் ஓர் அநாதரவான பொதி கிடப்பதைக் கண்டோம்." அதன் பின் நடைபெற்றிருக்கக்கூடிய நிகழ்வுகளை பொருத்தமான எழுவாய், பயனிலையைக்கொண்டு கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

1) ....

2) ....

3) ....

4) ....

5) ....

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 12 இன் பகுதி 1 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

தயார்படுத்தல் பரீட்சை -11, பகுதி-1 இன் விடைக்குறிப்புகள்

01-3	02-2	03-2	04-2	05-2	06-3	07-1	08-3	09-2	10-11
நிகழ்காலத்தில் உள்ள பொருத்தமான வாக்கியங்கள். 13-14						14-27	15-3	16-4	17-4
18-2	19-3	20-2	21-3	22-1	23-2	24-3	25-3	26-2	27-1
28-2	29-3	30-1	31-1	32-4	33-2	34-1	35-1	36-4	37-3
38-2	39-3	40-2							

எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பு மாவட்ட
பிரபல ஆசிரியர்கள்
திரு.T.திலீப்குமார் & திரு.T.மன்மதகாந்தன் ஆகியோர்
தொகுத்து வழங்கும்
வினாத்தாள்-12
வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு
கல்வீச் சுடர் அறியத்தருகின்றது.

ஆக்கம்:-ஆசிரியர் திரு.யு.எல்.எம்.சாஜித்,
கல்முனை/அல்-மஷ்கர் பெண்கள்
உயர்தர பாடசாலை, நிந்தவூர்.

கல்விச்சுடர் தொடர்பான
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும்
தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.
071-6850005 / 071-4273035.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய லியோ கழக அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட பிரதிப் பொருளாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா லியோ உறுப்பினர்களுக்குத் சத்தியப்பிரமாணம் செய்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம். (207)

யாழ்.இந்துக் கல்லூரி வணிக மாணவர் மன்றம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்திய வணிக அறிவுப் போட்டியில் முதலிடம் பெற்ற கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மாணவி சுனோசுவேந்திரனுக்கு யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி க.தேவராஜா தங்கப்பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

சேவைநலன் பாராட்டு விழா

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கூட்டுறவுச் சேவையாற்றி இளைப்பாறிச் சென்ற தோழர்கள்

நல்லூர் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கத்தில்
கடந்த 26 வருடங்களுக்கு மேலாக
கூட்டுறவுச் சேவையாற்றியும்
கூட்டுறவு ஊழியர்
தொழிற்சங்கம்
(கிளை - நல்லூர்
ப.நோ.கூ.சங்கத்தின்)
நிர்வாகத்தில் கடந்த 1986ஆம்
ஆண்டு தொடக்கம் 23
வருடங்களாக
தொடர்ந்து உயர் பதவிகளை
வகித்து மிக நீண்டகாலம்
செயலாளராகவும் செயலாற்றிச்
சங்கப் பணியாளர்களுக்குச்
சேவையாற்றியும்
இளைப்பாறிச் சென்ற

(84720)

தோழர்
திரு.பொன்னுத்துரை பத்மநாதன்
(லொறிச் சாரதி) அவர்களுக்கும்

தோழர்
திரு.பொன்னம்பலம் யோகரத்தினம்
(கிளை முகாமையாளர்) அவர்களுக்கும்

நாளை (01.05.2009) வெள்ளிக்கிழமை (தொழிலாளர் தினம்) முற்பகல் 10 மணிக்குத் தலைவர் **தோழர் திரு.செ.செல்வகுமாரன்** அவர்கள் தலைமையில் திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் இவர்களின் கூட்டுறவுச் சேவையைக் கௌரவித்து பாராட்டி எமது தொழிற் சங்கத்தினால் ஒரு சேவை நலன் பாராட்டு விழாவை நடத்தவுள்ளோம். விழா நாயகர்களை பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் *(கிளை - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்).*

ஒய்வூதிய சமூக பாதுகாப்புத் திட்டத்தில் இணைந்த மேலும் 78 பேருக்கு இம்மாதம் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ்.மாவட்டத்தில் கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் இணைந்து தற்போது 60 வயது பூர்த்தியடைந்துள்ள மேலும் 78 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் 6 பேருக்கு விதவைகள் ஓய்வூதியமும் வழங்கப்படவுள்ளது.

பெயர் குறிப்பிடப்பட்டோர் இன்று வியாழக்கிழமையும் எதிர்வரும் 4ஆம் திகதியும் யாழ்.ப.நோ.கூ. சங்கக் கட்டடத்தில் உள்ள கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் மாவட்ட அலுவலகத்தால் தமக்குரிய ஓய்வூதியப் புத்தகத்தைப் பெற்று தமது பிரிவு தபால் அலுவலகத்தில் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியம் பெறுபவர் விவரம்:

த.அருமைத்துரை -கோண்டாவில் மத்தி, கி.கந்தவனம் - அரியாலை மேற்கு, கி.பரமேஸ்வரி - சுன்னாகம், க.பூபாலசிங்கம் - அளவெட்டி, மா.சிவலிங்கம் - கோண்டாவில் கிழக்கு, செ.செல்வநாதன் - அரியாலை, செ.யோகம்மா - மட்டுவில் கிழக்கு.

ச.இராசம்மா - திருநெல்வேலி வடக்கு, பொ.சந்திரபாலன் - கோண்டாவில், ந.மாணிக்கம் - தெல்லிப்பழை, கு.சரோஜினிதேவி - கோப்பாய் தெற்கு, க.இராசரத்தினம் - மாவிட்டபுரம், வ.கிட்டிணன் - நாவற்குழி, மு.கந்தவனம்- மீசாலை தெற்கு, நா.யோகராணி - இணுவில் மேற்கு, ச.சிவநேசன் - இணுவில் மேற்கு.

த.செல்லம்மா - துன்னாலை தெற்கு, க.செல்வம் - கைதடி, சி. தங்கராசா - நுணாவில், க.நடராசா - மீசாலை, ச.சிவானந்தராசா- இணுவில், க.பஞ்சலிங்கம் - மானிப்பாய், தி.ம.சுப்பிரமணியம் - பருத்தித்துறை, கு. இரத்தினசபாபதி - கோண்டாவில் கிழக்கு, க.அன்னலிங்கம் - கல்வியங்காடு, க.தருமராசா -சுன்னாகம், செ.சிவப்பிரகாசம் - புலோலி.

க.மகேந்திரன் - சண்டிலிப்பாய், சி.சிறந்தமலர் - சண்டிலிப்பாய், க.இராசதுரை - திருநெல்வேலி, சோ.கந்தசாமி - சங்குவேலி, சி.சண்முகம் - சிறுப்பிட்டி, ச.தெட்சணாமூர்த்தி -அல்லாரை, ஞா.டேவிற் - பண்டத்தரிப்பு, க.நாகரத்தினம் -கந்தரோடை, சு. கந்தையா - சண்டிலிப்பாய், செ.இரத்தினசிங்கம் - சுன்னாகம், ந.கையிலாம்பிள்ளை - ஏழாலை, ஐ.செல்லத்தம்பி-கொக்குவில் மேற்கு.

கி.சபாரத்தினம் - வல்வெட்டித்துறை, சி. மகேந்திரம் - சுதுமலை, ஆ.லோரன்ஸ் - நவாலி, எஸ்.எம்.கே.ஜெயசீலி - சில்லாலை, நா.செல்வரத்தினம் - உரும்பிராய் மேற்கு, க.மகாலிங்கம் - நுணாவில், ந.மகேஸ்வரி - கோண்டாவில் மேற்கு, மா.பூபாலசிங்கம் - மட்டுவில் கிழக்கு, சி.ஈஸ்வரதாசன் - கொல்லங்கலட்டி, ந.சரஸ்வதி - புலோலி, ச.மங்கையர்க்கரசி - ஆனைக் கோட்டை, க.கெங்காதரன் - மீசாலை கிழக்கு, த.நடராசா - பண்டத்தரிப்பு, இ.ஈஸ்வரி - ஊரெழு மேற்கு, இ.சுப்பிரமணியம் - நீர்வேலி தெற்கு, இ. விஷ்ணுசிங்கம் - நவக்கிரி, சி.மகேந்திரன் - அளவெட்டி.

பொ.குமாரசாமி - சாவகச்சேரி, க.தங்கராசா - அளவெட்டி வடக்கு, க.இரத்தினம் - சுன்னாகம், ச.செல்லமுத்து - ஆறுகால் மடம், சி.வேலன் -கைதடி தெற்கு, ந.வேலுப்பிள்ளை - இடைக்காடு, வ.கமலநாதன்- புலோலி மத்தி, சி.சற்குணம்- கோப்பாய் மத்தி, ந.அப்புத்துரை- பன்னாலை, ப.விக்கினேஸ்வரி - உடுவில் கிழக்கு, சு.செல்வராணி - இணுவில் கிழக்கு, தி.செல்வம் - தெல்லிப்பழை, வே.நாகராசா - நாவலி தெற்கு, த.சோமசுந்தரம் - மாதகல், யோ.தேவகன்னியா - வல்வெட்டித்துறை, ச.வேலாயுதம் - மல்லாகம், ஐ.சிவநேசன் - ஏழாலை மேற்கு, ச.பாலசுப்பிரமணியம் - மாவிட்டபுரம், இ.சரஸ்வதி - கொல்லங்கலட்டி, சோ.அருணகிரிநாதன் - சுதுமலை, சுலானி யோசப்பு - பெரியவிளான், ச.அரியரட்ணம் ஏழாலை மேற்கு.

விதவைகள் ஓய்வூதியம் பெறுவோர்

அ.வள்ளிநாயகி - அளவெட்டி, ச.சந்திராதேவி - நீர்வேலி, ப.பத்தினி - மட்டுவில் தெற்கு, செ.நகுலாதேவி - அச்செழு, அ.நாகேஸ்வரி ஏழாலை, இ.செல்லப்பாக்கியம் - புத்தூர். (1-86)

ஈராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
18.02.1935



விண்ணில்
25.04.2007

அமரர் வைத்திலிங்கம் காங்கேசு

திதி: சஷ்டி

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவில் தெரிவது ஆசை முகம்
எங்களுக்குப் புன்னகை தந்து
தோள் கொடுத்து உயர்த்திய அப்பாவே!
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது.

நி.மு.: கொல்லங்கலட்டி.
த.மு.: சுன்னா.

(84374)

குடும்பத்தினர்.

புலித்தலைவர்கள் கைதாகி விட்டனரா? அரசிடம் கேட்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஏப். 30

புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவு பெற்றுவிட்டதா? பிரபாகரன், பொட்டு அம்மான், சூசை போன்ற புலித் தலைவர்கள் கைது செய்யப்பட்டுவிட்டனரா?

- இப்படி அரசிடம் கேள்வி கேட்டுள்ளது ஐக்கிய தேசியக்கட்சி.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.க. எம்.பி. ஜயலத் ஜயவர்த்தன இக்கேள்வியை அரசிடம் முன்வைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

புலிகளுக்கெதிரான யுத்தம் நிறைவு பெற்றுவிட்டதாக அரசு அறிவித்துள்ளது. அப்படியென்றால் புலிகள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனரா?

புலித் தலைவர்களின் நிலை என்ன? அவர்கள் கைது செய்யப்பட்டுவிட்டனரா?

புலிகளை மூன்றாம் தரப்பினரிடம் சரணடையவிடமாட்டோம் என்று அரசு தெரிவித்துள்ளது. அதேவேளை, யுத்தநிறுத்தத்துக்கோ பேச்சுக்கோ தயாரில்லை என்றும் அரசு கூறியுள்ளது.

யுத்தம் தொடர்பாக அரசின் தற்போதைய நிலைப்பாடுதான் என்ன? யுத்தம் முற்றுமுழுதாக நிறைவு பெற்றுவிட்டதா?

இது குறித்து அரசு இந்த நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். மக்கள் அரசின் நிலையை எதிர்பார்க்கின்றனர் - என்றார். (சி)

மரவேலைப் பயிற்சி

வலி.வடக்கு,ஏப்.30

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுன்னாகம் மரவேலைப் பயிற்சி நெறி பாடசாலையில் மரவேலைப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் நாளை வெள்ளிக்கிழமை உடுவில் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவி அறிவித்துள்ளார். (9-86)

"பஞ்சகம்மாளர்" நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.30

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் எழுதிய ''பஞ்சகம்மாளர்'' நூல் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் பொன். தர்மேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நல்லை ஆதீனகுருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்தி நூலினை வெளியிட்டு வைக்க முதல் பிரதியினை சு.பாஸ்கரன் ஆச்சாரியார் பெற்றுக்கொள்வார். (9)

ஏசியன் கல்வி நிலையம்
மீசாலை
O/L DAY CLASS
ஆரம்பமாகி விட்டன.
(84743)

தவறி விட்டது

உதயசூரியன் வீதி, உடுவில், சுன்னாகம் என்னும் முகவரியுடைய கந்தையா ஜெகதாசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (683422916 V),விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், இராணுவ அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் ஒன்று உதயசூரியன் வீதிக்கும் அம்பலவாணர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுவாமிநாதன் கடையில் அல்லது 077 6063032, 021 2240206 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (84875)

SOCKS காலுறைகள்
மொத்தமாக வாங்கி
விற்பனை
செய்யக்கூடியவர்கள் தேவை
(Wanted Whole Sale Buyers)
- பாடசாலை காலுறைகள் (நைலோன், பருத்தி)
- ஆண்கள் காலுறைகள் (பருத்தி)
- டெனிஸ் காலுறைகள்

சிலோன்மா நிட்டிங்
தொழிற்சாலை.
இல. 364/E அவரிவத்தை வீதி,
பட்டகம வடக்கு, ஜா-எல.
Tel: 0772543440, 0778525938
FLEX Graphic

கல்வியியற் கல்லூரியின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.30

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குக் கல்லூரியின் வீரசங்கிலியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாகக் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (201)

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நல்லூர்,ஏப்.30

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறும். இதில் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்வர்.

நெடுந்தீவில் பனம்பொருள் அபிவிருத்தி குறித்த பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகப் பனம்பொருள் அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் பயிற்சியை முடித்துக் கொண்ட 20 பயிற்சியாளர்கள் பனம் கைத்தொழில் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (203-111)

ரின்மீன் போசாக்கு உணவை விரும்பும் மாணவர்கள்

கரவெட்டி,ஏப்.30

பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவுடன் வழங்கப்படும் ரின்மீன் உணவை வடமராட்சிப் பகுதி பாடசாலை மாணவர்கள் அதிகம் விரும்பி உண்பதாகப் பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

ரின்மீன்களை அதிகமாக விரும்பி உண்ணுவதற்குக் காரணம் கடைகளில் விற்பனை செய்யப்படும் ரின்மீன்களை விட அதிக சுவையானதாகவும் ஏனைய ரின்மீன்களைப் போல் துர்நாற்றம் வீசுவதில்லை என்பதாகவும் மாணவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கல்வி வலயங்கள் பாடசாலை மட்டத்தில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளும் மேற்கூறப்பட்ட கருத்துகளையே தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது. (203-70)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

விளையாட்டுக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான விளையாட்டுக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரும் விளையாட்டுக் குழுத்தலைவருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள் இக்கூட்டத்தில் ஐந்து வலயங்களையும் சேர்ந்த உடற்கல்விப் பணிப்பாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

தற்காலிக இணைப்பில் கடமையாற்றுவோருக்கு உரிய வலயங்களில் வேதனம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுக் கடமையாற்றுவோருக்கு மே மாதம் தொடக்கம் அந்தந்த வலயக் கல்வி அலுவலகத்தினால் வேதனம் வழங்கப்படவுள்ளது.

தற்காலிக இணைப்புப் பெற்றுக் கடமையாற்றும் ஆசிரியர், அதிபர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இதுவரை மாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பப்படும் சம்பளப் பட்டியல் மூலம் மாதாந்தம் வழங்கப்பட்டு வந்தது.

மே மாதம் தொடக்கம் அந்தந்த வலயக் கல்வி அலுவலகங்களில் வேதனம் வழங்குமாறு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார். (203-207)

கரவெட்டியில் கல் உடைக்கும் தொழிற்சாலை: சூழல் மாசடையும் என மக்கள் மகஜர்

கரவெட்டி,ஏப்.30

கரவெட்டி, வெல்லன் விநாயகர் ஆலயச் சூழலில் கல்லுடைக்கும் தொழிற்சாலை அமைக்கப்படுவதால் சூழல் மாசடையும் நிலை ஏற்படலாம் என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கரவெட்டி பிரதேச சபைச் செயலர், கரவெட்டி பிரதேச செயலர், சுற்றுச் சூழல் அதிகாரி, யாழ். அரச அதிபர், பருத்தித்துறை சுகாதார சேவை அதிகாரி ஆகியோர்களுக்கு மகஜர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

✱ மக்கள் நீராடலுக்கான நன்னீர்க் குளம் அமைந்துள்ள இடம்

✱ 500 பரப்பு நெல் வயல் நிலம் அருகிலுள்ளது

✱ வெல்லன், மத்தொனி இரு கிராமத்தைச் சேர்ந்த 400 குடும்பங்கள் அச்சூழலில் உள்ளன.

✱ அப்பகுதி மக்களுக்கான திறந்த வெளிக் கிணறும் அச்சூழலிலேயே உள்ளன.

✱ அச்சூழலில் தொன்மை வாய்ந்த வெல்லன் விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இதில் மூன்று காலப் பூசையுடன் மடப்பள்ளியில் தயாரிக்கப்படும் நைவேத்தியம் தினம் அடியார்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (203-70)

குடாநாட்டு விதை விற்பனையாளர்களை பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஏப்.30

குடாநாட்டில் உள்ள விதை விற்பனையாளர்கள் 2003ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க விதைச்சட்டத்தின் பிரிவு 08இற்கேற்ப பதிவுசெய்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை உத்தியோகத்தர் அ.றமணிதரன் அறிவித்துள்ளார்.

விதை நடுகைப் பொருள்களை இறக்குமதி செய்தல், வர்த்தக நோக்கங்களுக்காக விதை நடுகைப் பொருள்களை உற்பத்தி செய்தல், விதை நடுவைப் பொருள்களைப் பகிர்ந்தளித்தல், விதையினைப் பதனிடுதல், பொதியிடுதல், மீளப் பொதியிடுதல், விதை விற்பனை முகவர்கள், சில்லறை அல்லது மொத்த விதை வியாபாரிகள், நாற்றுமேடையாளர்கள், விதைகள் நடுகைப் பொருள்கள், விற்பனையாளர்கள், உள்நாட்டுச் சந்தைக்கு விதை நடுகைப் பொருள்களை விநியோகிப்பதுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் செயற்பாடுகள்.

மேற்குறிப்பிட்டவாறு முன்பதிவின்றி விதை நடுகைப் பொருள்கள் என்பவற்றை உள்நாட்டுச் சந்தைக்கு விநியோகிப்பது டன், தொடர்புடைய சம்பந்தப்பட்ட ஏதே னும் செயற்பாட்டில் ஈடுபடுவதானது குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 16ஐ மீறியதாகவே கருதப்படும்.

இது தொடர்பாகப் பதிவுகளை மேற்கொள்வதற்கு திருநெல்வேலியில் விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இயங்கும் விதை அத்தாட்சிப்படுத்தல் அலுவலகத்தில் அல்லது ''பணிப்பாளர்'' விதை அத்தாட் சிப்படுத்தல் தாவரப் பாதுகாப்புச் சேவை, இல. 74, கண்ணொறுவ பேராதனை என்ற முகவரியில் முத்திரையிடப்பட்ட கடித உறையினை அனுப்பி தபால் மூலமாகவும் பதிவுக்கான விண்ணப்பப் படிவங்களை தேவையான தகவல்களுடன் பெற்றுக் கொள்ளலாம் என்றும் மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் அ.றமணிதரன் அறிவித்துள்ளார். (9)

கற்கை நெறிகளுக்கான ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தால் 2009/2010 கல்வியாண்டுக்குரிய பொதுநிர்வாகத்தில் முதுகலைமாணி மற்றும் பண்பாட்டியல் முதுகலைமாணி கற்கை நெறிகளுக்கான ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது. மேற்படி கற்கை நெறிகளுக்குப் பதிவு செய்த அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பட்டப்பின் படிப்புகள் பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் அ.வே.மணிவாசகர் அறிவித்துள்ளார். (201)

வலி.கிழக்கில் புகையிலை அறுவடை

யாழ்ப்பாணம்,ஏப்.30

வலி.கிழக்குப் பிரதேசத்தில் விவசாயிகள் மேற்கொண்ட புகையிலைச் செய்கை அறுவடை செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இம்முறை புகையிலைச் செய்கையில் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. திடீரெனப் பெய்த கடும் மழையினாலும் மற்றும் புகையிலைப் பயிரில் ஏற்பட்ட நோய்த் தாக்கத்தாலும் இச்செய்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த புகையிலை அறுவடை செய்யும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. (203-224)

திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்ற இ.ஜெயகாந்தனின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வில் கலாமன்ற இயக்குநர் அருட்திரு. மரியசேவியர் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், சங்கீதரத்தினம் சி.மகேந்திரனுக்கு ஜெயகாந்தன் குருவணக்கம் செலுத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம். அரங்கேற்ற நிகழ்வை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

தீவகப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் .

வேலணை,ஏப்.30

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடைபெறும் உடற்பயிற்சிப் போட்டிகள் ஏற்கனவே அறிவித்ததன்படி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகத் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (201-207)

வீதி ஒழுங்கு தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு

நவாலி,ஏப்.30

யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகத்தினர் வீதி ஒழுங்கு தொடர்பான அறிவுறுத்தல்கள், செய்முறைப் பயிற்சி விளக்கம் மற்றும் பயிற்சிக் கருத்தரங்கு ஆகியவற்றை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு அண்மையில் நடத்தியுள்ளனர்.

மேற்படி பாடசாலை அதிபர் சிவகடாட்சம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லயன் சாந்தன், லயன் ராசா, லயன் நித்தியானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (201-100)

தையல் கண்காட்சி

நவாலி,ஏப்.30

சமூக சேவைகள் அமைச்சின் தொழிற்பயிற்சிப் பிரிவின் தையல் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் இக்கண்காட்சி நடைபெறவுள்ளது. (203-100)

நெல்லியடி ம.வியில் தற்காலிக கருமபீடங்கள்

கரவெட்டி,ஏப்.30

இடம்பெயர்ந்துள்ளோரின் நன்மை கருதி பல்வேறு பிரிவினரும் தற்காலிக கருமபீடங்களை நெல்லியடி ம.வியில் அமைத்துள்ளனர்.

அஞ்சல் பிரிவு, வங்கிச் சேவை, மருத்துவ சேவை, ப.நோ.கூ.சங்கம் ஆகியன தமது சேவைகளை ஆரம்பித்துள்ளன. (203-70)

மே தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.30

மே தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வேம்படி வீதியில் அமைந்துள்ள அகவிழி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த சா.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொழிற்சங்க அமைப்புக்களை சார்ந்தோர் உரையாற்றுவர். (203-224)

பகல்வேளையில் திருட்டு

நவாலி,ஏப்.30

நவாலிப் பகுதியில் ஆள்கள் இல்லாது பூட்டப்பட்டிருந்த வீட்டை உடைத்து பகல்வேளையில் நாற்பதினாயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நவாலி ஞானவைரவர் வீதியிலுள்ள வீடொன்றில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின்பக்க வாசல்கதவு வழியாக உள்ளே நுழைந்த திருடர்கள் பூட்டியிருந்த வீட்டின் சாவியைத் தேடி எடுத்து திறந்து உள்ளே வைக்கப்பட்டிருந்த நாற்பது ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் கதவைப் பூட்டி உரிய இடத்தில் சாவியை வைத்துவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர் மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். (201-100)

நெல்லியடி ம.வியில் உள்ளோரின் விரவங்களைப் பார்வையிடலாம்

கரவெட்டி,ஏப்.30

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்கள் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

உறவினர்கள் அலுவலக நேரத்தில் இதனைப் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-70)

சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.30

சாவகச்சேரி கல்வயல் ஹரிகர புத்திரர் ஐயனார் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெற்று வருகின்றன.

சங்காபிஷேக தீர்த்தம் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கும் திருக்கல்யாணத் திருவிழா மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடைபெறவுள்ளது. (201-207)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.30

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறுகின்றன.

தேர்த்திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமை சித்திரா பௌர்ணமியன்று தீர்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201-207)

* * *

அச்சுவேலி,ஏப்.30

அச்சுவேலி இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் முதலாவது வருட பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறுகின்றன.

எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை சப்பறத்திருவிழாவும் 7ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று 9ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழா இடம்பெறவுள்ளது.

(201-11)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.30

கலைநகர் சித்தங்கேணி கம்பம்புலோ ஆதிவைரவப் பெருமான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேக மகாசங்கல்பத்துடன் ஆரம்பித்து விசேட பூசை நடைபெற்று இறுதியாக மகேஸ்வரபூசை இடம்பெறவுள்ளது.

(201)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.30

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

திருவிழா காலங்களில் தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெற்று வருகிறது.

(203-224)

ஜி.சீ.ஈ (சாதாரண) பரீட்சையில் மேலும் சில பாடசாலை முடிவுகள்

யாழ்பாணம்,ஏப்.29

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ (சாதாரண)தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த முடிவுகள் வருமாறு.

வல்வெட்டித்துறை

கம்பர்மலை வித்தியாலயம்

க.கமலவாசன் 8ஏபி, சி.பிரதீவ் 8ஏ சி, செ.சுவர்ணா 5ஏ 2பி சி எஸ், ச.பாமினி 4ஏ 2பி 2சி எஸ், சா.பிருந்தாவன் 2ஏ பி 3சி 2எஸ், த.தயாமதினி ஏ 4பி 4சி, இ.பிரதாபன் ஏ 2பி 3சி 2எஸ், தி.தர்சன் ஏ பி 2சி 4எஸ், த.தாரணி ஏ பி 2சி 3எஸ், த.மயிந்தன் ஏ 5சி, த.மதுரேகா ஏ 2சி 4எஸ், ந.சுதந்தினி 4சி 2எஸ், கு.கிருஷாந்தன் 3சி 3எஸ், ச.பிறேமிகன் 2பி 5எஸ்,

உடுவில் மகளிர் கல்லூரி

தமிழ்மொழி மூலம்: ப. பாமினி 6ஏ 2பி எஸ், ர. பாதுஷா 5ஏ 2பி சி, கலைச்செல்வி 5ஏ 2பி சி எஸ், ர. ஜனனி 5ஏ 2பி 2சி, ச.ஏஞ்சல் நிவேதிகா 4ஏ 3சி 2எஸ், க.கலீசியா 4ஏ பி சி 2எஸ், கை. சுதர்சினி 4ஏ 4பி சி, ந. பிர வீனா 3ஏ பி 3சி எஸ், சி. கிருஷிகா 3ஏ பி 3சி 2எஸ், ம. அகஷான் 3ஏ 3பி 3சி, க. டினோயா 3ஏ 2பி 3சீ எஸ், ச.சயந்தினி 3ஏ பி 2சி 2எஸ், வி. சுஜீவினி 3ஏ பி 2சி 3எஸ், ச. சோபனா 3ஏ 3பி 3சி, ச. சுகன்யா 3ஏ 2பி 2சி எஸ், சி.தமிழினி 3ஏ பி 4சி எஸ், ஜெ.வினோ ஜினி 2ஏ பி 4சி எஸ், சோ. அருந்ததி 2ஏ 2பி 3சி 2எஸ், ப. டிலானி 2ஏ 2பி 3சி எஸ், தி. கேதாரணி 2ஏ 3பி 3சி எஸ், பா.மிதுலா 2ஏ 5சி எஸ், பு. நிறஞ்சனா 2ஏ பி 2சி 3எஸ், ம.யாழினி 2ஏ பி 3சி 2எஸ்

ஆங்கில மொழி மூலம்: எஸ். இந்துகா 7ஏ 2பி, எல்.டவ்மியா 6ஏ 3சி, ஆர். தபித்தா கிறீஸ்ரின் 5ஏ 3பி எஸ், என். நர்த்தனா 5ஏ 2பி சி எஸ், ஏ. மேரி தர்சிகா 5ஏ 2பி சி எஸ், ஜே. சுகன்யா 5ஏ பி 2சிஎஸ், கே. பிரியங்கா 4ஏ 2பி 2சி எஸ், ஜே. பெனிக்றொஸ்னா 4ஏ பி 3சி எஸ், என். பானுஜா 3ஏ 4பி 2சி, ஆர். சத்தியா 3ஏ 2பி 2சி எஸ், எஸ். அனிற்றா 2ஏ 2பி சி 3எஸ், பி. ஜெகனா 2ஏ பி 5சி எஸ், வி.ஏஞ்சல் சஞ்சிகா 2ஏ பி 4சி 2எஸ், ஆர்.பிரசன்யா ஏ 4பி 3சி எஸ், (9- 86 - 253)

தமிழர் படுகொலையைத் தடுக்காத தமிழ் நாட்டைக் கண்டித்து 'கலைமாமணி' விருதை திருப்பி அனுப்பினார் கவிஞர் இன்குலாப்

தமிழ்நாடு,ஏப்.30

ஈழத் தமிழர் படுகொலையைத் தடுக்காத தமிழ்நாடு அரசைக் கண்டித்து தனக்கு அளிக்கப்பட்ட 'கலைமாமணி' விருதை திருப்பி அனுப்பி உள்ளதாக கவிஞர் இன்குலாப் தமிழ்நாடு அரசுக்கு எழுதிய கடிதம் மூலம் தெரிவித்திருக்கின்றார். தமிழ்நாடு மாநில அரசால் 2006ஆம் ஆண்டுக்கான 'கலைமாமணி' விருது கவிஞர் இன்குலாப்புக்கு வழங்கப்பட்டிருந்தது.

'கலைமாமணி விருது, எனக்கு கௌரவமாக அல்லாமல் முள்ளாகக் குத்திக் கொண்டிருக்கிறது. இதைத் தமிழக அரசிடமே திருப்பித் தருவதுதான் எனது மனித கௌரவத்தைத் தக்கவைத்துக் கொள்வதாக அமையும் எனவும் அக்கடிதத்தில் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஏற்கனவே இந்திய மத்திய அரசால் வழங்கப்பட்ட 'பத்மசிறீ' விருதினை திருப்பி அனுப்பப் போவதாக இயக்குநர் பாரதிராஜா தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'கலைமாமணி' விருதை திருப்பி அனுப்புவதற்கான காரணங்களை விளக்கி கவிஞர் இன்குலாப் விரிவான கடிதம் ஒன்றையும் தமிழ்நாடு அரசுக்கு எழுதி அனுப்பியுள்ளார். (203)

பாடசாலை மாணவர்களுக்கு சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.30

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வடமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு சித்திரக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இச்சித்திரக் கண்காட்சிக்கான சித்திரங்கள் பாடசாலை மாணவர்களிடையே போட்டி மூலம் தெரிவு செய்யப்படவுள்ளதாக வடமாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (04-224)

எல்லாம் நன்மைக்கே

(ஸ்வாமி ஒரு கதை கூறினார். அரசன் கைவிரல்களை வெட்டிக்கொண்டபோது, மந்திரி எல்லாம் நன்மைக்கே என்று கூறினான். அரசனுக்கு எரிச்சல் ஏற்பட்டது. அவன் மந்திரியைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டான். மந்திரி தண்டனையையும் புன்னகையுடன் "எல்லாம் நன்மைக்கே" என்று கூறியேற்றுக்கொண்டான். அவன் கூறியது உண்மையாயிற்று. ஏனெனில், அரசன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றபோது, மலை நாட்டு ஜாதியினரால் சிறைப்படுத்தப்பட்டான். அங்கு அவனைப் பலியிட ஏற்பாடுகள் நடந்தன. ஆனால் கடைசியில் ஒரு விரலின் ஒரு பகுதி வெட்டப்பட்டிருந்ததால், காயம் பட்ட ஒருவனைப் பலியிடலாகாது என்று கருதப்பட்டு அவன் விடுதலையடைந்தான். இதுபற்றி அறிந்த மந்திரி "நான் மட்டும் அரசனுடன் சென்றிருந்தால், காயமில்லாத என்னைப் பலியிட்டிருப்பார்கள். ஆகவே நான் சிறைப்பட்டதும் நன்மைக்கே என்று கூறினான்).

கடவுள் செய்வதனைத்தும் பக்தர்களின் நன்மைக்கே. அவர் சுயநலமில்லாதவர். கேட்டதைத்தரும் கற்பகத்தரு. வீட்டின் பழக்கடையில் இருக்கும்போது, பழங்கள் தேடியலைவதேன்?

அன்புநிறைந்த தூய எண்ணங்கள், உன்னிடமிருந்து கடவுளுக்குச் செல்ல வேண்டும். அப்போது கடவுளின் அன்பு உனக்கு பிரவகிக்கும். நீ ஒரு கடிதத்தை பதிவுத் தபாலில் அனுப்பினால், விலாசதாரரைச் சேர்ந்தது என்பதற்கு அடையாளமாக உனக்கு ஒப்புதல் சீட்டு திரும்ப அனுப்பப்படும். உனது அன்பு நேர்மையானது என்பதற்கு, இறைவனருள் உனக்குக் கிட்டுவதே உரிய அத்தாட்சி.

இறைவன் திருவருளுக்காக மிகுந்த ஏக்கத்துடன், அவரை பெயரை இடைவிடாமல் கூறிக்கொண்டு பொறுமையுடன் காத்திரு. உனக்கு முன்னால், கடவுளின் வடிவம் தோன்றுவதை கட்டாயம் காண்பாய்.



சுவாமி சிந்தனை

உரும்பிராயில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவின் திறப்புவிழா நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

மருத்துவமனையின் பெயர்ப்பலகையை யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் திரைநீக்கம் செய்துவைப்பதை முதலாவது படத்திலும் விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ரிச்சாட் போக்ஸ் மருத்துவப் பிரிவை நாடாவெட்டித் திறந்து வைப்பதை மூன்றாவது படத்தில் காணலாம்.

டாக்டர் திருமதி யாழினி யோகேஸ்வரன் தலைமையுரை நிகழ்த்துவதை நான்காவது படத்திலும்-

பிரதம விருந்தினரை டாக்டர் திருமதி யாழினி யோகேஸ்வரன் பரிசோதனை செய்வதையும் 'நிக்கொட்' திட்டப்பணிப்பாளர் ரி.லங்காநேசன், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.பிறேமினி; 'நிக்கொட்' பொறியியலாளர் எஸ். சிவரூபன், பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் அருகில் நிற்பதையும் ஐந்தாவது படத்தில் காணலாம். மருத்துவமனையை அமைப்பதற்கான காணியை அன்பளிப்புச் செய்த ஆசிரியர் [illegible] வைத்திய கலாநிதி என்.சிவராஜா நினைவுச் சின்னம் வழங்குவதை ஆறாவது படத்தில் காணலாம்.

போரில் புலிகள் ஒழிக்கப்பட்டாலும் மீண்டும் புதியவர்கள் பிறப்பார்கள்!

விடுதலைப் போராட்ட இயக்கங்களின் வரலாறு இதுவே என்கிறார் கருணாநிதி

சென்னை, ஏப். 30

இப்போதைய போரில் ஒருவேளை விடு தலைப் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டாலும் கூட புல், பூண்டுகள் அழிந்த மண்ணில் மீண்டும் புதிய செடிகள் முளைப்பதைப் போல புதியவர்கள் பிறப்பார்கள். அதுதான் விடுதலைப் போராட்ட இயக்கங்களின் வரலாறு என்றும், இலங்கைப் பிரச்சினை மக்களவைத் தேர்தலில் எதிரொலிக்காது என்றும் முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

உண்ணா விரதப் போராட்டம், எனக்கு முழுத் திருப்தியை அளித்துள்ளது. இலங்கையில் போர் நிறுத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என நம்புகிறேன். மழை விட்டும் தூவானம் தொடர்வது வழக்கம்தான். அதைப் போலத்தான் இலங்கையில் இப்போதும் தொடரும் விமானத் தாக்குதல்களைக் கருதவேண்டும்.

ஆனால் தேர்தல் முடிவுகளை இலங்கைப் பிரச்சினை எந்த அளவுக்கும் பாதிக்காது. தனி ஈழத்தை மோசமாகத் தாக்கிப் பேசியவர்கள் இன்று ஆதரிக்கிறார்கள். தேர்தல்தான் அதற்குக் காரணம். இப்பிரச்சினையில் இன்றைய சூழலில் மார்க்சிஸ்ட் கட்சியின் நிலையே, எங்களது நிலையும் ஆகும். சிங்களவர்களுக்கு இணையாகத் தமிழர்களுக்கும் சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். தமிழர்களுக்கு சுயாட்சி உரிமை கிடைத்திட வேண்டும் என்பதே அது.

அதையும் மீறி தனித் தமிழ் ஈழம்தான் வேண்டும் என தமிழ்ப் போராளிகள் போராடி வெற்றி பெற்றால், அதுவும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதுதான்.

இப்போதைய போரில் ஒருவேளை விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டாலும் கூட, புல், பூண்டுகள் அழிந்த மண்ணில், மீண்டும் புதிய செடிகள் முளைப்பதைப் போல புதியவர்கள் பிறப்பார்கள். அதுதான் விடுதலைப் போராட்ட இயக்கங்களின் வரலாறு.

ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தனா இடையேயான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இன்று அப்படியே அமுல்படுத்த முடியாது. காலத்துக்கேற்ப மாற்றம் செய்ய வேண்டும். அதில் திருத்தங்களைச் செய்த பின்னரே அமுல்படுத்த முயலவேண்டும். இன்றைய சூழலில் எத்தகைய ஒப்பந்தம் தேவை என்பது குறித்து நாங்கள் ஏற்கனவே அமைத்துள்ள நீதியரசர் குழுவுடன் விவாதித்து, அதை மத்திய அரசு மூலம் நிறைவேற்ற முயற்சி செய்வோம் - என்றார்.

அரசியலுக்கு ரஜினி வருவதை பொதுமக்கள் விரும்பவில்லை

அவரின் அண்ணன் தெரிவிப்பு

சென்னை, ஏப். 30

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவதில் பொதுமக்களுக்கு விருப்பமில்லை - என்று கிருஷ்ணகிரியில் அவரது அண்ணன் சத்திய நாராயணராவ் கெய்க் வாட் கூறியுள்ளார்.

நடிகர் ரஜினிகாந்தின் பூர்வீக கிராமம் என்று கூறப்படும் கிருஷ்ணகிரி அருகே உள்ள நாச்சிகுப்பம் கிராமத்தில் ரஜினிகாந்த் பெற்றோர்களான ரானோஜிராவ்-ராம்பாய் நினைவு மணி மண்டபம் கட்டப்படவுள்ளது. இந்த இடத்தில் சென்னை ராகவேந்திரா அறக்கட்டளை சார்பில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் குழாய் திறப்பு விழா 28ஆம் திகதி நடந்தது.

நிகழ்ச்சியில் ரஜினி காந்தின் அண்ணன் சத்தியநாராயணராவ் கெய்க் வாட் கலந்து கொண்டு குடிநீர் குழாயைத் திறந்து வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இந்த நாச்சிகுப்பம் கிராமத்துக்கு ரஜினி சிறு வயதில் இருமுறை வந்துள்ளார். இந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு அவர் நன்மை செய்ய வேண்டும் என்று நினைக்கிறார். ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவதை பொதுமக்கள் விரும்பவில்லை. அவர் நடிகராக இருக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் விருப்பமாகும் - என்றார்.

ஈழப்பெண்களின் நிலை குறித்து கண்ணீர் விட்டுக் கதறிய வைகோ

ஊட்டி, ஏப். 30

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உணவின்றி அவதிப்படுகின்றனர். தாய்மார்கள் தன் மார்பகப் பகுதியைக் கிழித்து இரத்தத்தை ஒரு வேளை பசிக்கு குழந்தைகளுக்குக் கொடுக்கின்றனர் என்று பேசியவாறே திடீரென கண்ணீர் விட்டுக் கதறியழுதார். இதைக்கேட்ட பொது மக்களும் கண்ணீர் விட்டுக் கதறினர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊட்டி பிரசாரத்திலேயே அவர் மேற்கண்டவாறு பேசினார். மேலும் பேசியவை வருமாறு -

எமது உறவினர்கள் சொந்த மண்ணில் வாழ்வியல் ஆதாரங்களை இழந்து இறந்து கொண்டு இருக்கின்றனர். கூட்டம் கூட்டமாக தமிழர்கள் கொன்று குவிக்கப்படுகின்றனர்.

இதற்கெல்லாம் கடந்த 5 ஆண்டுகளாக இந்திய அரசு ஆயுத உதவிகள், ராடர், உபகரணங்களை கொடுத்து தமிழ் மக்களை கொன்று குவிக்க உதவி செய்து வருகிறது.

இலங்கையில் தமிழ் பெண்கள் கூட்டம் கூட்டமாக கற்பழித்தும், பாலியல் ரீதியாக தொல்லைகள் கொடுத்தும் எரித்துக் கொல்லப்படுகின்றனர். அதனால் பெண்கள் இழிவாகச் சாவதை விட பட்டினியால் சாகலாம் என்று கருதுகிறார்கள்.

இலங்கையில் தமிழ் கர்ப்பிணி பெண்களின் வயிற்றைக் கிழித்து உள்ளிருக்கும் கருவை வெளியே போட்டு கொல்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை. சர்வதேச நிபுணர் குழு இது உண்மை என நிரூபித்து 91 சிசுக்களின் உடல்களைக் கண்டறிந்து உறுதி செய்தது.

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உணவின்றி அவதிப்படுகின்றனர். தாய்மார்கள் தமது மார்பக பகுதியைக் கிழித்து இரத்தத்தை ஒரு வேளை பசிக்கு குழந்தைகளுக்கு கொடுக்கின்றனர் என்று பேசியவாறே திடீரென கண்ணீர் விட்டுக் கதறி அழுதார். இதைக் கேட்ட பொது மக்களும் கண்ணீர் விட்டுக் கதறினர். இதனால் பிரசாரம் செய்த இடமே அமைதியானது.

இலங்கைத் தமிழருக்கு அதிகாரப் பகிர்வு: இந்தியாவின் அடுத்த கட்ட நடவடிக்கை அதுவாம்

புதுடில்லி, ஏப். 30

இலங்கையில், தமிழர்களுக்கு நிவாரணம், மறுவாழ்வு பணிகளை தொடர்ந்து, அதிகார பகிர்வுத் திட்டத்தை அமுல்படுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைத் தமிழர் பகுதியில் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில், அடுத்த கட்டமாக இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளைத் துரிதப்படுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று, உயர் அதிகாரி ஒருவர் டில்லியில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்கு மேலும் உணவு மற்றும் மருந்து பொருள்களை இந்தியா சார்பில் அனுப்பி வைக்கப்படும். அத்துடன் இந்திய டாக்டர்களை தமிழர் பகுதிக்கு அனுப்பி வைப்பதுடன், வவுனியா வைத்திய சாலையை 100 படுக்கைகள் வசதியுடன் விரிவுபடுத்தவும் இந்தியா உதவி செய்யும்.

இந்தியச் செய்திகள்

அடுத்து முக்கிய கட்டமாக, 1987ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், இலங்கை தமிழர் பகுதிக்கான அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை அமுல்படுத்தும்படி இந்தியா சார்பில் வற்புறுத்தப்படும்.

அதே நேரத்தில், இலங்கை தமிழர்களுக்கு யார் தலைமை தாங்குவது என்பது பற்றி கருத்து எதுவும் தெரிவிக்க இந்தியா விரும்பவில்லை. அதை இலங்கை தமிழர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்திருப்பதால், இந்தியாவுக்கு எதிரான அச்சுறுத்தல் அதிகமாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. விடுதலைப்புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு வரும் அகதிகள் கடுமையான சோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுவார்கள். சந்தேகப்படும் நபர்கள், உயர் பாதுகாப்பு முகாமில் தங்க வைக்கப்படுவார்கள். இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதிலும், ஐ.நா. சபை நடவடிக்கைகளில் ஆதரவளிப்பதிலும் சீனாவின் முக்கிய பங்கு பற்றியும் இந்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரன் பிடிபட்டால், அவரை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் ஏற்கனவே வற்புறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்படும். வருகின்ற 13ஆம் திகதி (தமிழக தேர்தல் தினம்) இலங்கைப் பிரச்சினை இந்தியாவில் முக்கிய பங்குவகிப்பது உறுதி - என்றார்.

இன்று 3 ஆம் கட்ட வாக்குப்பதிவு சோனியா, அத்வானி களத்தில்..!

புதுடில்லி, ஏப். 30

மக்களவைக்கு 3ஆவது கட்டமாக 107 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடக்கிறது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் அத்வானி ஆகியோர் இன்று தேர்தலைச் சந்திக்கின்றனர்.

மக்களவைக்கு ஏப்ரல் 16ஆம் திகதி முதல் மே 13ஆம் திகதி வரை 5 கட்டங்களாகத் தேர்தல் நடந்து வருகிறது. முதல் கட்டமாக 124 தொகுதிகளிலும் 2ஆவது கட்டமாக 141 தொகுதிகளிலும் தேர்தல் நடந்துள்ளது. குஜராத் (26 தொகுதிகள்), மத்தியப் பிரதேசம் (16 தொகுதிகள்), உத்தரப் பிரதேசம் (15), மேற்கு வங்கம் (14), கர்நாடகா (11), பீகார் (11), மகாராஷ்டிரா (10), காஷ்மீர் (1), சிக்கிம் (1) ஆகிய 9 மாநிலங்களில் 105 தொகுதிகளிலும் தாத்ரா நாஹர் ஹவேலி, டாமன் டையூ ஆகிய யூனியன் பிரதேசங்களில் தலா 1 தொகுதியிலுமாக மொத்தம் 107 தொகுதிகளில் இன்று 3ஆவது கட்டத் தேர்தல் நடக்கிறது.

அத்துடன் சிக்கிம் மாநில சட்டப் பேரவையின் 32 தொகுதிகளுக்கும் இன்று தேர்தல் நடக்கிறது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பா.ஜ.க. தலைவர் அத்வானி, முன்னாள் பிரதமர் தேவகவுடா, ஐக்கிய ஜனதா தள தலைவர் சரத் யாதவ் ஆகியோர் இன்று தேர்தலைச் சந்திக்கின்றனர். மொத்தம் 1,567 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 14 கோடியே 40 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோ தொகுதியில் அதிகபட்சமாக 41 பேர் போட்டியிடுகின்றனர்.

இன்று தேர்தல் நடக்கவுள்ள 107 தொகுதிகளிலும் பிரசாரம் நேற்றுமுன்தினம் ஓய்ந்தது. சோனியா காந்தி போட்டியிடும் ரேபரேலி தொகுதியில் அவரது மகள் பிரியங்கா நேற்றுமுன்தினம் இறுதிக் கட்டப் பிரசாரத்தில் ஈடுபட்டார். [illegible] நகர் தொகுதியில் [illegible] இறுதிக் பிரசாரத்தை மேற்கொண்டார்.

முதல் கட்டத் தேர்தலில் பீகார், ஜார்கண்ட், ஒரிசா, சட்டீஸ்கர் மாநிலங்களில் நக்சலைட்கள் நடத்திய தாக்குதலில் 18 பேர் பலியாயினர். 2ஆவது கட்ட தேர்தலின்போதும் பீகாரில் வாக்குச் சாவடிகளுக்கு தீ வைக்கப்பட்டது. ஆந்திராவில் ஏற்பட்ட மோதலில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இன்று நடக்கும் தேர்தலில் அசம்பாவித சம்பவங்கள் நடக்காமல் தடுக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக சோனியாவின் ரேபரேலி தொகுதியிலும் அத்வானியின் காந்தி நகர் தொகுதியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நான்காவது கட்டத் தேர்தல் மே 7ஆம் திகதி 85 தொகுதிகளிலும் 5ஆவது கட்டத் தேர்தல் மே 13ஆம் திகதி 86 தொகுதிகளிலும் நடைபெறும். தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளில் மே 13ஆம் திகதி வாக்குப் பதிவு நடக்கிறது.

தனது தொகுதியான காந்திநகரில் நேற்றுமுன்தினம் இறுதிக்கட்டப் பிரசாரத்தின்போது கூட்டத்தினரைப் பார்த்து கையசைக்கும் அத்வானியையும் -

சோனியா காந்தி போட்டியிடும் ரேபரேலி தொகுதியில் அவரது மகள் பிரியங்கா, தனது பாட்டி இந்திரா காந்தியின் சேலையை அணிந்து அவரைப் போல புன்னகை சிந்தியபடி கூட்டத்தினரைப் பார்த்து கையசைப்பதையும் காணலாம்.

இந்திராவின் சேலையில் பிரியங்கா...

மட்டக்களப்பில் முன்பயிற்சிக்கு தெரிவாகியுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் விவரம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

பட்டதாரி ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 37 பேருக்கு சேவை முன்பயிற்சி மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும்4 ஆம் திகதி முதல் இடம் பெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களை அடுத்த மாதம் 3ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கேட்டுள்ளார்.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்களை இன்று யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் விவரம் வருமாறு:-

ஆர். ஜெயகாந்தன் (ஊர்காவற்றுறை), ரி.தயாளினி (பண்டத்தரிப்பு), ரி.இராஜேந்திரகுமார் (மானிப்பாய்), எஸ்.விஜோதினி (கரவெட்டி), ஜி.வி.பாலராஜ் (யாழ்ப்பாணம்), ரி.சி.ஜோண் சிமென்ரினி (யாழ்ப்பாணம்), ஜி.பிரதீபா

(15 ஆம் பக்கம் பார்க்க)

தவறிவிட்டது

யாழ்.நகர் இலங்கை வங்கிக்கு அருகில் இருந்து பாஷையூருக்கு வரும் வழியில் (28.04.2009) வெள்ளைக்குண்டு டைமன் செயின் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மரியநாயகம் குயின்சி, இல: 53/4, புது வீதி, கொய்யாத்தோட்டம், என்னும் முகவரியுடன், 0774520622 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சேவை நலன் பாராட்டல்

அஞ்சல் திணைக்களத்தில் 39 வருடங்கள் சேவை ஆற்றியும் பண்டத்தரிப்பு அஞ்சல் அலுவலகத்தில் பொறுப்பு அஞ்சல் அதிபராகக் கடமையாற்றியும் இன்றுடன் (30.04.2009) ஓய்வுபெறும்

திரு. வை.சி.சுப்பிரமணியம்

அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அஞ்சல் சமூகம், பண்டத்தரிப்பு

கேள்வி அறிவித்தல் - இல - 04,05

கட்டடங்கள் திணைக்களம்
வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்.

கால நீடிப்பு

''உதயன்'' பத்திரிகையில் 26.03.2009, 31.03.2009 ஆகிய திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தல் தொடர்பானது.

கேள்விகள் திறக்கும் திகதி 07.05.2009 பி.ப. 3 மணியாக நீடிப்புச் செய்யப்படுகிறது.

க.கணேஷ்
தலைவர், மாவட்ட கொள்வல் சபை/
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், (வ.மா.),
யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்கள்

இளையதம்பி தனபாலசிங்கம்

கோப்பாய் வடக்கு, இராசவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தனபாலசிங்கம் 26.04.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி-செல்லம்மா தம்பதிகளின் அன்பு புத்திரனும், காலஞ்சென்ற இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சோதிமலரின் அன்புக் கணவரும் இராசரத்தினம், பூபாலசிங்கம், சிவபாக்கியம், கமலாதேவி, விவேகானந்தம், கனகமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதி, பூமணி, பத்திநாதன், செல்லத்துரை, வனிதா, சின்னராசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கார்த்திகா, கஜன், லோகதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கரனின் (லண்டன்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2009) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

இராச வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்

வை[illegible]லிங்கம் இராசையா

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும் தற்போது உரும்பிராயில் வசித்து வந்தவருமாகிய வைத்திலிங்கம் இராசையா நேற்று முன்தினம் (28.04.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - கனகம்மா தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்-பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும் ஞானலஷ்மியின் கணவரும் விக்கினேஸ்வரியின் (கனடா) அன்புத் தந்தையும் செல்வநாயகம் தருமரத்தினத்தின் (கனடா) அன்பு மாமனாரும் பரன்ராஜ், மகிஷா, கிரிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2009) வியாழக்கிழமை பி.ப. 3.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெற்றோல நிலையம் அருகாமை,
பலாலி வீதி,
உரும்பிராய்.

தகவல்:
க.செல்வநாயகம்
(மைத்துனர்)

மீள் கேள்வி அறிவித்தல் - இல - 06

கட்டடங்கள் திணைக்களம்
வடக்குமாகாணம், யாழ்ப்பாணம்.

01. செஞ்சிலுவைச் சங்கங்களின் சர்வதேச ஸ்தாபனத்திடமிருந்து சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், யாழ்ப்பாணம் அவர்கள் கீழ்வரும் வேலைகளுக்காக நன்கொடையொன்றைப் பெற்றுள்ளார்.

02. பிராந்திய பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம் சார்பாக தலைவர், மாவட்ட கேள்விச் சபை, அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். அவர்களால் தகுதி வாய்ந்த சகல கேள்விதாரர்களிடமிருந்தும் வல்வெட்டித்துறைப் பிராந்திய வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்வரும் வேலைக்கான மூடிய கேள்விகள் 18.05.2009 பிற்பகல் 03.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தொ. இல	ஒப்பந்தகுறியீட்டு இல	ஒப்பந்த வேலை விவரம்	இக்ராட் தரம்	கேள்வி பிணை	மீளளிக்கப் படாத கட்டணம்
01.	JF/BD/GA/HS/04/2009	வைத்தியர்களுக்கான விடுதி நிர்மாணித்தல் பிராந்திய வைத்தியசாலை வல்வெட்டித்துறை.	M5/C6	174,000.00	1000.00

03. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.
    - i) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - ii) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்விதகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - iii) முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா) யாழ்ப்பாணம் (தொ.இல. 021 222 2632) பரிசீலிக்கமுடியும்.
05. கேள்வி ஆவணங்களை 27.04.2009 தொடக்கம் 12.05.2009 பி.ப. 3.00மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா), யாழ்ப்பாணத்தில் செலுத்தி அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.
06. மூடிய கேள்விகளை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 18.05.2009 பிற்பகல் 03.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந் நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.
07. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில் தருநர் பொறுப்பாக மாட்டார்.

க.கணேஷ்
தலைவர், மாவட்ட கொள்வல் சபை/
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (வ.மா),
யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

திருமதி நவயோகராசா சாந்தநாயகி

(கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர், கால்நடை வைத்தியசாலை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)

பளையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவயோகராசா சாந்தநாயகி நேற்று (29.04.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் விடத்தற்பளை, பளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், சித்திரமேழி, இளவாலையைச் சேர்ந்த நமசிவாயம் (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ற்), காலஞ்சென்ற ஸ்ரீமதி தம்பதியினரின் அன்பு மருமகளும், நவயோகராசாவின் (நீரியல்வளத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், நக்கீரனின் (மாணவன், தரம் 11, யாழ். இந்துக் கல்லூரி) ஆசைத் தாயாரும், காலஞ்சென்ற மகாலிங்கம் (முன்னாள் சிறாப்பர்) மற்றும் கமலாம்பிகை (முன்னாள் உபதபாலதிபர், விடத்தற்பளை), சிவபாக்கியம் (கனடா), தங்கேஸ்வரி (கனடா), ஞானேஸ்வரி (இந்தியா), சச்சிதானந்தசிவம் (சுவிஸ்), விஜயகுமாரி (கனடா), காசிநாதன் (இத்தாலி), சுகிர்தா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரத்தினராசா (இளைப்பாறிய உபதபாலதிபர், இளவாலை), காலஞ்சென்ற சண்முகராசா (முன்னாள் தபால் அலுவலர்) மற்றும் ஜெயரட்ணராசா (உப தபாலதிபர், மாதகல் மேற்கு), தவயோகராசா (கிராம அலுவலர், பன்னாலை), சிவயோகராசா (நீதிமன்றம், சாவகச்சேரி), நகுலேஸ்வரராசா (மகளிர் உயர்தரப் பாடசாலை, பண்டத்தரிப்பு), குணரத்தினம் (இளைப்பாறிய உபதபாலதிபர்), மலர் (இளைப்பாறிய பிரதம லிகிதர்), கதிர்காமநாதன் (கனடா), தயாபரி (சுவிஸ்), சிவானந்தம் (கனடா), சியாமளா (இத்தாலி), நவம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2009) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இணுவில், காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந.நவயோகராசா (கணவர்),
(நீரியல்வளத் திணைக்களம், யாழ்ப்பாணம்).

குமாரலிங்கம் வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.



முள்ளிவாய்க்கால் வைத்தியசாலை ஷெல் வீச்சால் சேதமடைந்தது; 278 பேர் பலி; 298 பேர் காயம்

கொழும்பு, ஏப்.30

முள்ளிவாய்க்கால் பகுதியில் தற்காலிகமாக இயங்கிவரும் வைத்தியசாலையைச் சூழவுள்ள பகுதி மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 58 சிறுவர்கள் உட்பட 278 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 298 பேர் காயமடைந்தனர் என இணையத் தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நேற்றைய தாக்குதல் தொடர்பாக இணையத்தளங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இரட்டைவாய்க்கால், சாளம்பன், முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, இரட்டைப்பனையடி ஆகிய பகுதிகளே படையினரின் ஆட்லெறி ஷெல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் காயங்களுடன் நிலத்தில் கிடந்தவாறு பலர் அவதிப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் நோயாளர்களை ஏற்றிச்செல்லும் கப்பலில் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் வைத்தியசாலையில் நிலை மைகளை பார்வையிட்டனர்.

பார்வையிட்ட பின்னர் பிற்பகல் 1.30 மணிக்கு சென்றதும் பிற்பகல் 3 மணியளவில் மருத்துவமனைமீது மீண்டும் ஆட்லெறிஷெல் தாக்குதல் படையினரால் நடத்தப்பட்டது.

மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு இரத்த வங்கி, அறுவைச் சிகிச்சைக் கூட பகுதியில்ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் ஏற்கனவே காயமடைந்து சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தவர்களில் 19 பேர் கொல்லப்பட்டதுடன் 30 நோயாளர்கள் மேலும் காயமடைந்தனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை முதல் பிற்பகல் வரை நடத்தப்பட்ட தாக்குதல்களில் 58 சிறுவர்கள் உட்பட 278 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 298 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்படை பீரங்கித்தாக்குதலில் 10 பேர் துறைப் பகுதியில் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் நோயாளர்களை ஏற்றும் ஒழுங்கமைப்பில் ஈடுபடும் கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் பொருளாளர் சதாசிவம் நாகராசாவும் உயிரிழந்தார்.

மேலும் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள்பல பகுதிகளில் மீட்கப்படாமல் சிதறி கிடப்பதாக தெரிவிக்கப்பட்டது - என்றுள்ளது.

மட்டக்களப்பில்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயத்திரி (கொக்குவில்), என்.இ.தமிழ்ச்செல்வன்(கைதடி), ஏ.வைகுந்தன் (அல்வாய்), பி.பாஸ்கர் (கர வெட்டி), ஏ.நிதலவன் (வல்வெட்டித்துறை), எம்.கிருஸ்ணகுமார்(ஏழாலை), எம்.ஜெயமயூரன் (யாழ்ப்பாணம்), ஐ.இரங்கேஸ்வரன் (மானிப்பாய்), இ.சுதறாஸ் (ஏழாலை), இ.சிவாஜினி(சுழிபுரம்), எம். தரணிதரன் (வட்டுக்கோட்டை), ரி.அமலதாஸ்(கொக்குவில்), கே.சுதர்சன் (சித்தன்கேணி), என்.இராமேஸ்வரன்(சுழிபுரம்), எஸ்.ஆனந்தகுமார் (சாவகச்சேரி), எஸ்.சுகன்ஜா (பருத்தித்துறை), எல். எஸ்.ராதி (இளவாலை), ஜி.மதனா (யாழ்ப்பாணம்), பி.கண்ணதாச (காரைநகர்), பி.கஜகரன் (நீர்வேலி), பி.சயந்திகா (நல்லூர்), பி.உதயகுமார் (யாழ்ப்பாணம்), பி.பொபிதா (வல்வெட்டித்துறை), பி.வாமன்(அல்வாய்), கே.சுகாஜினி (பெரிய போக்கட்டி), டி.துளசி கரன் (சாவகச்சேரி), பி.தயாளினி (யாழ்ப்பாணம்), எஸ்.மயூரதாசன் (நாயன்மார்கட்டு), ரி.மதனமோகன்(யாழ்ப்பாணம்), எஸ்.காயத்திரி (வரணி),கே.தில்லையம்பலம்(மானிப்பாய்).

(1)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிவஸ்ரீ வைத்திலிங்க ஐயா இராஜேஸ்வரன் ஐயா
எமது மகனும் மருவி வந்த மகனுமாகிய
வைத்திலிங்க ஐயா இராஜேஸ்வரன் ஐயா

இன்று (30.04.2009) வியாழக்கிழமை
வடமராட்சி சுப்பர்மடம் முனீஸ்வரர் ஆலயத்தில்
சிவஸ்ரீ சோ.நடராஜாக்குருக்கள் அவர்களால்
குருப்பட்டம் பெறும் இந்த நன்னாளில் அவரது
இறைபணி இனிதே தொடரவேண்டும் என்று
ஆசிவழங்குவதுடன் எல்லாம்வல்ல
இலட்சுமணந்தோட்டத்தான், வீரமாகாளி
அம்மன் அருள்பெற்று குருத்துவத்தில்
தனித்துவம் பெற எமது அன்பு கலந்த
வாழ்த்துக்கள்.

திரு.திருமதி சிவஸ்ரீ வைத்திலிங்க ஐயா குடும்பத்தினர்.
இலட்சுமணந்தோட்டம், பருத்தித்துறை.

திரு.திருமதி
சிவஸ்ரீ வே.தியானந்தராஜாக்குருக்கள்
குடும்பத்தினர்.
நெல்லண்டை, பருத்தித்துறை.
021 2263157.

மரண அறிவித்தல்

அருளம்பலம் இராஜேஸ்வரி

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் இராஜேஸ்வரி நேற்று(29.04,2009)புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சடாட்சரம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் அருளம்பலத்தின் அன்பு மனைவியும் அருளேஸ்வரி, அருட்செல்வி (ஆசிரியை), அருளீஸ்வரன், அருள்ராஜேஸ்வரன், அருளாம்பிகை (ஆசிரியை), அருள்நந்தினி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயும் சிறீஸ்கந்தராசாவின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(29.04.2009) புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு- அன்னாரின் காரைநகர் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

கோவளம்,
காரைநகர்.

தகவல்:
சகோதரிகள்.

மரண அறிவித்தல்

திருமதி இரத்தினம்மா சபாரத்தினம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் இரத்தினம்மா நேற்று (29.04.2009) புதன்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பறுவதம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயரத்தினம் (சவுதி அரேபியா), சபாநாயகி, தனநாயகி, சிவநாயகி, லோகநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மராஜா (புனர்வாழ்வுப் பகுதி, கச்சேரி), இந்திராணி ஆகியோரின் சிறிய தாயாரும் சிவநாயகி காலஞ்சென்ற கணேசராசா மற்றும் தவத்துரை, தர்ம குலசிங்கம் (மாநகரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பொன் னுத்துரை மற்றும் வனசாட்சி ஆகியோரின் மைத்துனியும் நவீன், ஹரினி, ஹரிஷன், மது ராங்கினி, மாலதி (தாதி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்),மயூரன் - தர்சினி (லண்டன்), பவானுஷா, கிருஷாந், ஜவாஹரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2009) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

203/2, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 060 221 4138

தகவல்:
சிவநாயகி
(சிவா - மகள்).

மரண அறிவித்தல்

நாகலிங்கம் பரம்சோதி

(முன்னாள் ஊழியர், யாழ். ப.நோ.கூ. சங்கம்)

நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மேற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பரம்சோதி நேற்றுமுன்தினம் (28.04.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்வமணி தம்பதியரின் அன்பு மகனும் நாகரத்தினத்தின் (குணம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தேவராசா, காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் ஞானகுமார் - சாந்தசொரூபா, காலஞ்சென்ற இந்துமதி ஆகியோரின் மைத்துனரும் தயாபரன் - துஷானா, தபேந்திரா - லயனி, பாலச்சந்திரன் - சுகந்தினி, கஜேந்திரன் (கண்ணன்), ஜெகநாதன் -செந்தில் செல்வி (பியூட்டி), லோகேஸ்வரன் - லசிந்தா (வவா), பரமநாதன் -கலைச்செல்வி, காலஞ்சென்ற சிவசங்கர் மற்றும் இராஜசங்கர் (குட்டி)- சஜந்தா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(01.05.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பட்டினசபை ஒழுங்கை,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

தகவல்:
திருமதி ப.நாகரத்தினம்
(குணம் -மனைவி).

மாநகர சபை, யாழ்ப்பாணம்

முல்லைத்தீவு கடற்பரப்பில் தாக்குதல் புலிகளின் 4 படகுகள் முற்றாக அழிப்பு

கொழும்பு, ஏப். 30

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையில் நேற்று அதிகாலை கடற் சமர் ஒன்று இடம்பெற்றுள்ளதாக படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இரண்டு படகுகளில் வந்த புலிகள் அப்பகுதியில் தரையில் நிலைகொண்டிருந்த படையினர் மீது தாக்குதலை நடத்தினர் எனவும் - தாக்குதல் நடத்திய புலிகளின் படகுகள் மீது கடற்படையினர் பதில் தாக்குதல்களை நடத்தினர் என்றும் கூறப்படுகிறது.

பின்னர் நான்கு தற்கொலைப் படகுகளில் வந்த கடற்புலிகள் தாக்குதல் நடத்த முயன்றபோது அப்படகுகளை கடற்படையினர் தாக்கியழித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சமர் அதிகாலை 4.30 மணி முதல் காலை 6 மணி வரை நீடித்திருந்தது எனப் படைத்தரப்புச் செய்திகள் மேலும் கூறின.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்புலிகளின் உறுப்பினர் ஒருவரது சடலத்தை கடற்படையினர் மீட்டனர் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரையிறக்க முயற்சி முறியடிப்பு

இதேவேளை-

முள்ளிவாய்க்கால் பகுதியில் பெரும் எடுப்பில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தரையிறக்க முயற்சி கடற்புலிகளால் நேற்று முறியடிக்கப்பட்டுள்ளது என்று இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

முள்ளிவாய்க்கால் பகுதியில் கடற்படையினர் நேற்று புதன்கிழமை அதிகாலை 15 'டோறா' பீரங்கிப் படகுகள், 25 வரையான 'அரோ' படகுகள் மற்றும் 'கூகர்' படகுகளில் பெரும் எண்ணிக்கையிலான படையினரை தரையிறக்கும் முயற்சியாக பெரும் கடற் தாக்குதல் ஒன்றில் ஈடுபட்டனர்.இந்த தரையிறக்க முயற்சிக்கு எதிரான பாரிய முறியடிப்புத் தாக்குதலை கடற்புலிகளின் தாக்குதல் படகுகள் மேற்கொண்டன.

இந்த கடும் கடற் சண்டையின் போது கடற்படையினரின் 'டோறா' பீரங்கிப் படகு ஒன்று முற்றாக அழித்து மூழ்கடிக்கப்பட்டதுடன், மூன்று 'அரோ' படகுகளும் கடும் சேதங்களுக்கு உள்ளாக்கப்பட்டன.

பல மணி நேரம் நீடித்த இந்த கடும் சண்டையின் பின்னர், தமது தரையிறக்க முயற்சி கைகூடாத நிலையில் கடற்படையினர் பின்வாங்கிச் சென்றனர் என்று இணையத்தளச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (அ)

வன்னியில் சிக்கியு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த சந்திப்பின்போதே இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாக அரச வட்டாரங்கள் மேலும் கூறின.

இலங்கைப் படையினர், வெளிநாட்டு அமைப்புகள் எவற்றின் உதவியுமின்றி அப்பகுதியில் சிக்குண்டிருந்த சுமார் 115,000 மக்களை இதுவரை விடுவித்திருப்பதாகவும், எஞ்சியுள்ள நிலப்பரப்பில் சிக்குண்டுள்ள மக்களையும், அவ்வாறே தொடர்ந்து, நிதானமாக விடுவிப்பார்கள் என்றும் ஜனாதிபதி அவர்களிடம் தெரிவித்ததாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-1)

சுவீடிஷ் அமைச்ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலை தேசிய பாதுகாப்புக்கன ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வரு மாறு:-

பிரிட்டிஷ் வெளிவிவகரா அமைச்சர் டேவிட் மில்லிபான்ட், பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் கௌஷ்னர் ஆகியோர் முறையான முன்னறிவித்தல் கொடுத்து இலங்கை வந்துள்ளனர்.

சுவீடிஷ் வெளிவிவகார அமைச்சரின் கோரிக் கையை இலங்கை அரசு நிராகரிக்கவில்லை. ஒரே நேரத்தில் பலநாடுகளின் உயர்மட்டக் குழுவினரைக் கையாள முடியாததாலும் அவர்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்[illegible]டவேண்டும் என்பதாலும் அவரது [illegible]கக்காக வேறு தினம் ஒதுக்கப்பட்டு

அது தவிர அவருககு இலங்கை விஸா வழங்குவதற்கு மறுக்கவில்லை.- என்றார்.

(அ-சி)

ஷெல் வீச்சை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் 'த டெய்லி டெலி கிராவ்' தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் உறுதிமொழிக்கு மத்தியிலும் தொடர்ந்தும் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன என நம்பகதன்மை மிக்க தகவல்கள் கிடைத்துள்ளன என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோண் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களும் இதனை உறுதி செய்துள்ளன. எனினும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார இதனை மறுத்துள்ளார் என 'த டெய்லி டெலிகிராவ்' மேலும் தெரிவித்துள்ளது.

(அ-சி)

வலைஞர்மடப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று தற்கொலைத் தாக்குதல்களை நடத்தினர்.

அதேவேளை, அன்றையதினம் படையினர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இரு வேறு தற்கொலைதாரிகள் தாக்குதலை நடத்தினர். படையினர் காயங்களுடன் தப்பிக் கொண்டனர்.

மோட்டார் சைக்கிள் தற்கொலைத் தாக்கு தலை நடத்திய இரு மணி நேரங்களின் பின்னர் டபிள் கப் ரக வாகனத்தில் படையினரின் நிலைகளை நோக்கி மிக வேகமாகத் தாக்குதல் நடத்த வந்த தற்கொலைதாரிகளை நோக்கி இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். அதில் அந்த வாகனம் அழிக்கப்பட்டது- என்றும் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை வலைஞர்மடம் பகுதியில் மூன்று தற் கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார கூறினார்.

எனினும், தற்கொலைத் தாக்குதல்களில் உண்டான உயிரிழப்புகள் தொடர்பான விவரங்கள் நேற்று இரவு வரை வெளிவர வில்லை.

(அ-சி)

உள்ளூராட்சி மன்றச் செயலாளர் பதவி. பரீட்சைகளுக்கு இடைக்காலத் தடை உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப்.30

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றச் செயலாளர் பதவிகளுக்கு நடத்தப்படவிருந்த எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றை நிறுத்துமாறு யாழ். மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது.

அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கம் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்த மனு மீதே இந்தத் தடை உத்தரவை மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா பிறப்பித்தார்.

இந்தப் பதவிக்கான எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சை 28.04.2009, 29.04.2009 ஆகிய தினங்களில் நடைபெறவிருந்தது. குறிப்பிட்ட பரீட்சைக்கு 29 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

பாதிக்கப்பட்டவர்கீள் சார்பில் அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கம் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

வழமையாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு செயலாளர் பதவிகள் நிரப்பப்படும் போது செயலாளருக்கு அடுத்த நிலையில் உள்ள சிரேஷ்ட அதிகாரியே அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவது வழமை. ஆனால் இப்[illegible] நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரிகளை அந்தப் பதவிக்கு நியமிக்க நேர்முகப் பரீட்சை மாகாண சபையால் நடத்தப்படுகின்றது.

தற்சமயம் நடைமுறையில் உள்ள அரச முகாமைத்துவ நடைமுறைக் கோவைக்கு முரணாகவே இந்தப் பரீட்சை நடத்தப்படுகின்றது. இந்தப் பரீட்சை நடத்துவதை நிறுத்த உத்தரவிட வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் உட்பட 12பேர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனுவை ஆராய்ந்த மேல் நீ மன்ற நீதிபதி பரீட்சை நடத்துவதற் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித் துடன் அதனை உடனடியாக 'பக்ஸ்' மூலம பிரதம செயலாளருக்கு அனுப்புமாறும் உத்தரவிட்டார்.

(அ-1)

பிரிட்டிஷ், பிரெஞ்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தினோம்"- தொடர்ந்தும் வலியுறுத்துவோம்'' என தெரிவித்துள்ள பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர்பேர்னார்ட்கௌச்னர், எனினும் இதனை ஏற்றுக்கொள்வதா இல்லையா என எமது நண்பர்களை பொறுத்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தை வெல்வது போலவே சமாதானத்தையும் வெல்வது முக்கியம்

''இலங்கை அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுகள் முக்கிய தீர்மானங்களின்றி முடிவடைந்துள்ளன எனவும் யுத்தநிறுத்தத்திற்காக சர்வதேச ரீதியில் விடுக்கப்படும் அழைப்புகள் பொது மக்களை காப்பதற்கானவை எனவும் அவை விடுதலைப் புலிகளுக்கு உதவுவதற்கானவை அல்ல என்றும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் வலியுறுத்தினார்.

தற்போது யுத்தத்தை நிறுத்துவதற்கான தருணம். இராணுவம் அற்புதமான வெற்றிகளை பெற்றுள்ளது. எனினும், சமாதானத்தை வெல்வது யுத்தத்தை வெல்வது போன்று மிக முக்கியமானது என்றும் டேவிட் மில்லிபாண்ட் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவரை பாதுகாப்பதற்காக சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த எவரும் யுத்த நிறுத்தத்தையோ அல்லது தாக்குதல் நிறுத்தத்தையோ கோரவில்லை. பொதுமக்களின் நலன் குறித்த ஒட்டுமொத்த கரிசனையின் விளைவாகவே இந்தக் கோரிக்கை எழுந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களை பாதுகாப்பதே மிக முக்கியமானது. விடுதலைப் புலிகள் பொதுமக்களைத் தடுப்பதை நிறுத்த வேண்டும். மோதலை நிறுத்த வேண்டும் என்றும் டேவிட் மில்லிபாண்ட் மேலும்கேட்டுள்ளார். (அ-சி)

7,000க்கும் அதிக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக் கூறியுள்ளது.

வவுனியா நலன்புரி முகாமில் உள்ள சுமார் 300 தமிழ் இளைஞர்கள் படையினரால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள னர் என்பது கூட பெற்றோர்களுக்கு தெரியவில்லை என்றும் பிரிட்டிஷ் அமைச்சரிடம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு வின் தலைவரும் திருகோண[illegible] மாவட்ட நாடாளுமன்ற [illegible]பினருமான இர.சம்பந்தன், யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் பிரிட்டனின் வெளிவிவகார அமை சர் டேவிட் மில்லிபாண்டை நேற்று சந்தித்துப் பேசியபோது மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

இரண்டு அமைச்சர்களுடனான ச[illegible] பில் கூட்டமைப்புச் சார்பில் எடுத்து கூ[illegible] விடயங்கள் தொடர்பாக சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊடகங்க ளுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் மக்களை ஏமாற்றிய இலங்கை அரசு தற்போது சர்வதேச நாடுகளை ஏமாற்றி வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு ஏற்பாடுகளில் கையொப்பம் இட்ட இலங்கை அரசு இன்று அவற்றை எல்லாம் மீறியுள்ளது. குறிப்பாக மனித உரிமைகளை பாதுகாப்பது விடயங்களில் ஜெனிவா தீர்மானங்களுக்கு அமைவாக ஒப்பந்தங்களில் கைசாத்திட்ட விடயங்கள் எல்லாவற்றையும் மீறி இன்று தனது சொந்த குடிமக்களையே கொலை செய்து வருகின்றது.

கனரக ஆயுதங்களை பாவிக்க மாட்டோம் என்று இந்தியாவுக்கு கொடுத் வாக்குறுதிகள் கூட மீறப்பட்டு தற்போது முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் குறுகிய நிலப்பரப்பில் தங்கியுள்ள மக்களின் வாழ்விடங்கள் மீது கனரக ஆயுதங்களினால் தாக்குதல் நடத்தி வருகின்றது இலங்கை இராணுவம்.

ஆயிரத்து 500 மக்கள் கொல்லப்ப[illegible]டமைக்காக கொசோவாவை தனிநாடாகியது சர்வதேசம். இன்று வன்னியில் மூன்று மாதங்களில் 7 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட [illegible] ஆனால் அதை சர்வதேசம் கை க[illegible] பார்த்து நிற்பது எதற்காக?

இலங்கையின் வடக்கு கிழக்கில் தனியான நிர்வாகம் ஒன்றின் கீழ் வாழ்ந் தமிழ் மக்களை சிங்கள அரசுடன் இணைத் சுதந்திரம் கொடுத்து விட்டுபோன பிரிட்டிஷ் அரசுதான் அதனால்தான் இன்று இவ்வளவு பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. ஆகவே தமிழர் பிரச்சினை யில் தலையிட வேண்டிய பொறுப்பு பிரிட்டனுக்கே உண்டு. என்றார்.

இவற்றைச் செவி மடுத்த வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட், நிலைமைகளை நேரில் அறிவதற்கே கொழும்புக்கு வந்தார் என்றும் மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார் என்று கூட்டமைப்பு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

(அ-சி)

ஐடியல் அக்கடமி
நீராவியடி, யாழ்.நகர்
மின்னொளியில்
தரம் 9,10,11 மாணவர்களுக்கான
கணிதம் Paper Class
வாரத்தில் மூன்று நாள்களில்
மாலை 6.15-7.15
கணித ஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2011 கலை, வர்த்தகம், கணிதம் - புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன
இணைந்த கணிதம்
T.தவசேகர் B.sc.
sat.,sun.3p.m.
A/L 2010 நடைபெறுகின்றது
O/L DAY CLASS
(BEST STAFF)

O/L Day Class (8.30-2.00)
நாளை ஆரம்பம்
பிரிவு I ஒரு சில அனுமதிகள் மட்டும் Apr. 30 மட்டும்
பிரிவு II 01.05.2009 8.30மணி
* இவ்வருடம் பிரிவு 08 மட்டும்.
* விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
* 33 வருடமாக O/L DAY CLASS கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கமாகவும் நடைபெறும் ஒரே இடம்.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வணிகமாணி தேர்வுக்கான மீட்டல்
* கணிதமும் புள்ளிவிவரவியலும்
ஆரம்பம் - வெள்ளி (01.05.2009)
Part-I (1.30 -3), Part-II (3 -4.30)
1st Com (4.30-6)
★ ஏனைய வகுப்பு நேரங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
D.M.I நாவலர் வீதி

PHYSICS - K.Selvan
A/L 2011
அடிப்படை பௌதிகவியல்
ஆரம்பம்- 02.05.2009
(Sat., Sun. - 2.30 - 3.30a.m.)
A/L 2010
ஒளியியல்
Light
Batch-I
(Sat., Sun. - 3.30- 4.30 p.m.)
Batch-II
(Sat., Sun. - 4.30- 5.30 p.m.)
ஆரம்பம்- 02.05.2009
NAVALAR
Anaipanthy, Jaffna.

PHYSICS - K.Selvan
A/L 2011
நிலையியல்
ஆரம்பம்- 02.05.2009
(Sat., Sun. - 9 - 10 a.m.)
A/L 2010
வெப்பவியல்
Heat
ஆரம்பம்- 02.05.2009
(Sat., Sun. - 7.45 - 8.45 a.m.)
NEC
Clock Tower Road, Jaffna.
பெருமாள் கோயிலுக்கு அருகில்

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
PAPER CLASS
தமிழ்
திரு.குழந்தை
ஆரம்பம்
05.05.2009
9மணி

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
பொருளியல்
B.கஜீதரன்
2011 அலகு -01 12-1 மணி
பொருளியல் பற்றிய அறிமுகம்
2010 அலகு -03 8-9 மணி
ஆரம்பம்
02.05.2009

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2011
கலைப்பிரிவு
Tam. - திரு.[illegible]
Eco. - திரு.B.கஜீதரன்
Log. - திரு.R.S.[illegible]
Hic. - திரு.[illegible]
Geo. - திரு.[illegible]
Hin. - திரு.N.T.[illegible]
Hist. - திரு.S.S.[illegible]
Pl.sci. - திரு.[illegible]
Chri. - திரு.[illegible]
Dram. - திரு.[illegible]
(ஆரம்பம்: சனி 8மணி)
வர்த்தகப்பிரிவு
Eco - திரு.B.கஜீதரன்
Acc - திரு.P.[illegible]
B.st - திரு.[illegible]
அனுமதிகளை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.
(ஆரம்பம் சனி 02.05.2009

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.04.2009 இல் அச்சிட்டு வெள[illegible]பெற்றது.